கள் ஒழிந்த சேலம்



ஆனந்த விகடன் பிரசுராலயம்
சென்னை.

இதே பதிப்பு வாதிரியில் இருக்கிறது.
இது ராஜாஜிக்கு.

ஆனந்த விகடன் அச்சுக்கூடம்
சென்னை

விலை அணா 2

கள் ஒழிந்த சேலம்

மது விலக்குச் சட்டத்தின்
முதல் வருஷத்து வெற்றி

[1938 செப்டம்பர் முடிய ஒரு வருஷத்தில் சேலம் ஜில்லாவில் மதுவிலக்குச் சட்டம் அமுல் நடந்தது பற்றி மேற்படி ஜில்லா கலெக்டர் சர்க்காருக்கு அனுப்பிய அறிக்கையின் முக்கிய அம்சங்கள்]

சேலம் ஜில்லாவில் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்து இப்பொழுது ஒரு வருஷம் ஆகிறது. சட்டம் எப்படி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்பதையும், அதனால் இந்த ஜில்லா ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பலாபலன்கள் என்ன என்பதையும் ஜில்லா கலெக்டர் டிக்ஸன் அவர்கள் சர்க்காருக்கு அனுப்பிய இந்த அறிக்கையில் சுருக்கமாகக் கூறுகிறார்.

மது விலக்குச் சட்டத்தை இந்த ஜில்லாவில் அமுலுக்குக் கொண்டு வருவதில் அநேக இடைஞ்சல்கள் இருந்தன. ஆரம்பத்தில் இவை பிரமாதமாகத் தோன்றின. இந்த ஜில்லாவில் ஜனத்தொகை அதி

கம். குடிப் பழக்கமுள்ளவர்கள் அதிகம். கலால் சட்டங்களை மீறும் குற்றங்களும் இங்கே அதிகமாய் நடந்து வந்தன. இதற்கு முன்னர் இந்த ஜில்லாவில் சில பிரதேசங்களில் மதுவிலக்கு ஓரளவு அனுஷ்டிக்கப்பட்டுக் கைகூடாமற் போயிருக்கிறது. போதாததற்குக் கலால் உத்தியோகஸ்தர்கள் இங்கிருந்து நீக்கப்பட்டனர். இவையெல்லாவற்றையும் பார்த்தபோது, மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவது அசாத்தியமென்றும், அப்படிக் கொண்டு வந்தாலும் அது கடைசியில் தோல்வி யுறலாமென்றும் தோன்றிற்று.

ஆனால் நடந்ததென்ன? விஷயங்கள் தெரிந்தவர்களும், அநுபவமுள்ள நிபுணர்களுமே கண்டு ஆச்சரியப்படும்படி மதுவிலக்குச் சட்டம் அவ்வளவு தூரம் வெற்றி யடைந்திருக்கிறது. மதுவிலக்குச் சட்டம் இப்படி வெற்றி யடைந்ததற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானது முன்னால் குடித்துக் கொண்டிருந்தவர்கள் பலர் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதிய நிலைமையைப் பொதுவாக ஒப்புக்கொண்டதே யாகும். குற்றங்களைத் தடுப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்களாயிருந்தாலும் சரி, எவ்வளவு சுறுசுறுப்புடன் வேலைசெய்தாலும் சரி, முன்பு குடித்துக்கொண்டிருந்த லட்சக் கணக்கான ஜனங்கள் மட்டும் குடியை நிறுத்துவதில்லை யென்று தீர்மானித்திருந்தால், இச் சட்டம் வெற்றி அடைந்திராது. அவர்கள் இப்படி இந்தப் புதிய நிலைமையை ஒப்புக்கொண்டதற்கு முக்கிய காரணங்கள் என்று சொல்லக்கூடியவை வருமாறு :—

முதலாவதாக, ஜனங்களிடம் சுபாவமாகவே சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்பது என்ற குணம் இருக்கிறது. அடுத்தபடி காந்திஜிக்குக் கிராமங்களில் இருக்கும் விசேஷ செல்வாக்குப் பெரிதும் உதவி செய்தது. சர்க்கார் அதிகாரிகள் இப்பொழுது வற்புறுத்துவது காந்திஜியின் கொள்கைதான் என்று அரசியல் தலைவர்கள் முன்கூட்டியே ஜனங்களிடம் பிரசாரம் செய்திருக்கிறார்கள். இன்னும், மேல் நாடுகளில் அபினி கஞ்சா சாப்பிடுவது எவ்வளவு அவமானம் என்று கருதப்படுகிறதோ, அது மாதிரி இந்த நாட்டில் குடிப்பதும் அவமானம் என்று கருதப்படுகிறது. இதனால் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னும் குடித்துக் கொண்டிருந்தவர்களை சமூக விலக்கு செய்ய வேண்டுமென்றுகூட அநேக கிராமங்களில் கருதினார்கள். இன்னும் உத்தியோகஸ்தர்கள், பொதுஜனத் தலைவர்கள் எல்லாரும் சேர்ந்து இச்சட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் காட்டிய பூரண சிரத்தையும், ஜனங்களில் குடிப்பழக்க மில்லாதவர்கள் எல்லாரும் ஒரு முகமாகச் சட்டத்துக்குச் சாதகமாக இருந்ததும் அதன் வெற்றிக்குக் காரணங்களாயின.

பழைய குடிகாரர்கள் சிலர் குடிக்க விரும்பினாலும் அதற்காகப் பணத்தைச் செலவழித்துக்கொண்டு சுற்றுப்புற ஜில்லாக்களுக்குப் போகத் தயாராய் இல்லை. திருட்டுச் சாராயக்காரர்களும் இப்பொழுது நிலைமை மதுவிலக்குச் சட்டம் வருவதற்கு முன்பு இருந்ததுபோல் இல்லை என்று தெரிந்து கொண்டார்கள். முன்போல் திருட்டுச் சாராயத்தை

லைசென்ஸ் பெற்றது என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. கலால் இலாக்கா உளவறிபவர்களை ஏமாற்றினுல் போதும் என்று எண்ண முடியவில்லை. உளவறிந்து சொல்லக்கூடிய புதிய ஆசாமிகளின் உதவிபெற்ற ஒரு பலமான போலீஸ் படை, மற்ற இலாக்கா உத்தியோகஸ்தர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், தாலுக்கா, கிராமக் கமிட்டி அங்கத்தினர்கள், காங்கிரஸ் ஊழியர்கள், இன்னும் மதுவிலக்குச் சட்டத்தின் வெற்றியில் அக்கரை கொண்டவர்கள் ஆகிய இவ்வளவு பேரையும் மீறித் திருட்டுக் கள் இறக்குவதோ, திருட்டுச் சாராயம் காய்ச்சுவதோ சுலபமான காரியமில்லை. மேற்சொன்ன எல்லாரும் தங்களுக்கு எதிராக இருக்கிருர்களென்றும், அகப்பட்டுக் கொண்டால் கடுமையான தண்டனை கிடைக்கும் என்றும் அவர்களுக்குத் தெரியும். ஆகவே மிகவும் சிறுபான்மையினரை மட்டும் பாதிக்கும் கஞ்சா கேஸ்களை நீக்கிவிட்டுப் பார்த்தால், மதுவிலக்குச் சட்டத்தை மீறிய குற்றங்கள் இவ்வளவு குறைவா என்று ஆச்சரியப்படும்படி இருக்கும். பொதுவாக, குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. மேற்படி வழக்குகளைப் பத்திரிகைகளில் விசேஷ முக்கியம்கொடுத்து வெளியிட்டிருந்தபடியால், சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்காகக் கடுமையான அடக்கு முறை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன என்ற ஓர் எண்ணம் ஏற்படலாம். ஆனுல் இது உண்மையல்ல. மதுவிலக்குச் சட்டத்துக்கு முந்திய வருஷங்களில் ஆப்காரி சட்டத்தின் கீழ் எத்தனை பேர் குற்றஞ் சாட்டப்பட்டார்களோ, அதைவிட 1937-38ல் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் எண்ணிக்கை மிகக்

குறைவு என்னும் உண்மையைப் பின்வரும் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன :—

	முன் மூன்று வருஷ சராசரி [1934-35, 35-36, 36-37]	மதுவிலக்கு வருஷத்தில் 1937-38
திருட்டுச் சாராயம் காய்ச்சுதல்	294	111
திருட்டுச் சாராயம் வைத்துக் கொண்டிருத்தல்	133	96
திருட்டுச் சாராய விற்பனை	1	3
திருட்டுக் கள் இறக்குதல்	599	170
வேறு வழிகளில் திருட்டுச் சாராய உற்பத்தி	1	0
திருட்டுச் சாராயம் அனுப்புதல்	17	10
லைசென்ஸ் இல்லாமல் கள் சாராய விற்பனை	42	0
லைசென்ஸ் இல்லாமல் சாராயம் வைத்துக் கொண்டிருத்தல்	268	72
மொத்தம்	1355	462
எரி திராவகம் முதலியவை		103
திருட்டுத்தனமாகக் கள் கொணர்தல்		71

அபினி கஞ்சா விஷயமே வேறு. மதுவிலக்குக்கு முன்னால் அபினி கஞ்சாக் கடைகள் அநேகம் இருந்த படியாலும் சட்டத்துக்குட்பட்டே ஏராளமாக விற்பனையாகிக் கொண்டிருந்தபடியாலும் திருட்டுக் கேஸ்கள் கண்டு பிடிப்பது அநேகமாக முடியாத காரியமாயிருந்தது. ஆனால் இப்போது அந்தக் கேஸுகளைக் கண்டு பிடிப்பது சுலபமா யிருப்பதால், கேஸுகள் அதிகமாகி யிருக்கின்றன. கஞ்சா கேஸுகளை மாத்திரம் எடுத்துக் கொண்டால் மதுவிலக்குக்கு முன் 55 ஆக இருந்தது இப்பொழுது 616 ஆகி யிருக்கிறது. ஆனால் எல்லாக் கேஸுகளையும் மொத்தமாக எடுத்துப் பார்த்தால் முன்பு 1,338 ஆக இருந்தது இப்பொழுது 1,251 தான் இருக்கிறது.

போலீஸ் இலாக்கா வேலை

மதுவிலக்கு வெற்றி யடைந்ததற்கு இன்னொரு முக்கிய காரணம் போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் தங்களுக்கு முன்பின் பழக்கமில்லாத ஒரு காரியத்தைப்பற்றிய சட்ட திட்டங்களை நன்றாகக் கிரஹித்துக் கொண்டு, மிகவும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலை செய்ததாகும்.

1937ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி வரையில், இந்த ஜில்லாவில் கள், சாராயம் சம்பந்தமான சகல தணிக்கைகளும் கலால் இலாக்காவால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அக்டோபர் மாதம் முதல் தேதி கலால் இலாக்கா இந்த ஜில்லாவிலிருந்து எடுக்கப்படவே, அவர்கள் செய்து கொண்டிருந்த வேலையைப் போலீஸ்காரர்கள் ஒப்புக்கொண்டனர்.

தங்கள் சாதாரண வேலைகளுடன் மதுவிலக்கு வேலையையும் கவனித்துக் கொள்ளக்கூடிய போலீஸ்காரர் எண்ணிக்கையைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த உதவிப் போலீஸ் படை முதலில் ஜில்லாவில் உள்ள பத்துப் போலீஸ் வட்டாரங்களுக்கும், வட்டாரத்துக்கு ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு ஹெட் கான்ஸ்டபிள், நான்கு போலீஸ் கான்ஸ்டபிள் வீதம் அனுப்பப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு கள் இறக்கும் காலம் ஆரம்பமானதை உத்தேசித்துப் போலீஸ் படையை இன்னும் அதிகப்படுத்துவது உசிதம் என்று தோன்றிற்று. உதவி ஹெட் கான்ஸ்டபிள், சாதாரண கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது. சுற்றுக் காவல் புரியும் போலீஸ் படையும் அனுமதிக்கப்பட்டது. ஜில்லாவை எட்டுப் பாகங்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு பாகத்திலும் உள்ள ரஸ்தாக்களை ஒரு ஹெட் கான்ஸ்டபிளும், ஒரு சாதாரண கான்ஸ்டபிளும் சைகிளில் ஏறிக் காவல் புரிந்தார்கள். இவர்களைக் கவனித்துக்கொள்ள மோட்டார் சைகிளுடன் சப் இன்ஸ்பெக்டர்கள் இருவர் ஜில்லாவின் ஒரு பாதிக்கு ஒருவராக நியமிக்கப்பட்டார்கள்.

இது சம்பந்தமாகப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அவசியமான பயிற்சி அளிப்பதற்கும் ஜில்லா போலீஸ் சூப்பரண்டெண்டுடன் ஒத்துழைத்து வேலை செய்வதற்கும் கலால் இலாக்காவிலிருந்து ஒரு உதவி கமிஷனரும், ஒரு உதவி கலால் இன்ஸ்பெக்டரும் தருவிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு மதுவிலக்கு உத்தியோகஸ்தர், உதவி மதுவிலக்கு உத்தியோகஸ்தர் என்று முறையே பெயர்கள் கொடுக்கப்பட்டன. ஒன்பது

மாதங்களுக்குப் பிறகு ஜில்லா போலீஸ்காரர்கள் சட்டத்தின் நடைமுறைகளையெல்லாம் தெரிந்துகொண்டுவிட்டதால் உதவி கமிஷனரை நீக்கி ஜில்லா போலீஸ் சூப்பரண்டென்டின் மேற்பார்வையின் கீழ் மதுவிலக்கைக் கவனித்துக்கொள்வதற்காக ஒரு டிபுடி போலீஸ் சூப்பரண்டென்டு நியமிக்கப்பட்டார். உதவி கலால் இன்ஸ்பெக்டர் இப்பொழுது ஜில்லா மதுவிலக்கு உளவு ஸ்தாபனத்தைக் கவனித்துக்கொண்டு வருகிறார்.

போலீசும், சுற்றுக் காவல் போலீசும் சேர்ந்து 4,773 மோட்டார் வண்டிகள், 14,932 பஸ்கள், 3,042 லாரிகள், 47,309 கட்டை வண்டிகள், ஜட்காக்கள், 1,98,032 சைகிள்கள், 11,377 ரயில் பிரயாணிகள், பாதசாரிகள், இன்னும் மூட்டைகளைச் சுமந்து செல்லும் மட்டக் குதிரைகள், மாடுகள், எல்லாவற்றையும் பரிசோதித்தனர். இதன் பயனாக 36 வழக்குகள் கிடைத்தன.

போலீசார் பழைய குடியர்களின்மேல் விசேஷ கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். இந்தப் பழைய குடியர்களில் 5,975 பேர் கலால் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள். 318 பேர் மதுவிலக்குச் சட்டத்துக்கு முந்திய 5 வருஷங்களில் கலால் குற்றங்களுக்காக ஒரு தடவைக்கு மேலேயே தண்டிக்கப்பட்டவர்கள். இதோடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட 1,123 பேர்களையும் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. மற்றும், இம்மாதிரி குற்றங்களுக்குப் பேர்போனது என்று சொல்லப்படும் 168 கிராமங்களும் கவனித்துக்கொண்டு வரப்பட்

டன. இப்பேர்ப்பட்ட கிராமங்களைப் பற்றிய விவரங்கள் போலீஸ் ரிக்கார்டுகளில் கிடைக்கும்.

பழைய ஆப்காரி சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டவர்களில் 20 பேர்தான் புதுச் சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டார்கள் என்பது ஆச்சரியமான விஷயம். 13 பேர், மதுவிலக்குச் சட்டத்தை மீறியதற்காக ஒரு தடவைக்கு மேல் தண்டிக்கப்பட்டவர்கள்.

ஜில்லாவின் அநேக பாகங்களில் கட்சிச் சண்டையிடும் சுபாவம் இருந்தபோதிலும், பொய் வழக்கு கொண்டு வந்ததற்கோ அல்லது பொய்ச் சாட்சி தயாரித்ததற்கோ எட்டே எட்டுக் கேஸுகளில்தான் குறிப்பான சாட்சியம் கிடைத்தது. இவற்றில் மூன்று வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டது; மூன்று வழக்குகள் தள்ளப்பட்டன; பாக்கி இரண்டில் இன்னும் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. சந்தேகாஸ்பதமான வழக்குகளையும், கட்சிச் சண்டை போட்டுக் கொள்ளும் சுபாவமுள்ள இடங்களில் ஏற்படும் வழக்குகளையும் பற்றி விசாரிக்கும்போது மிக்க ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மாதிரி வழக்குகளை ஒரு இன்ஸ்பெக்டர் நேரிலேயே விசாரிப்பது வழக்கம். எல்லா வகுப்புப் போலீஸாருக்கும் ஏற்பட்ட கஷ்டமான வேலைகளை அவர்கள் திறமையாகச் செய்தது குறிப்பிடத் தக்கது.

சட்டத்தை வெற்றிகரமாகச் செய்வதற்காக ஆரம்பத்திலேயே மிகவும் ஜரூராக இருக்கவேண்டி வந்தது. இதனால் உள்ளூர் போலீஸ் அதிகாரிகள் அதிகப் பளுவைத் தாங்க நேர்ந்தது. தென்னை

மரங்களைப் பரிசோதிப்பது, வண்டிகளைப் பரிசோதிப்பது, காட்டுப் பாதைகளைக் காவல் புரிவது, குடியர்களின் பெயர் முதலிய விவரங்கள் சேகரிப்பது, ஜனங்களின் நிலைமையைப் பற்றி அடிக்கடி கிராமங்களில் போய் விசாரிப்பது ஆகிய பல வேலைகளைத் தங்களுக்கு வழக்கமாக உள்ள கடமைகளுடன் செய்ய வேண்டி வந்தது. முதலில் இருந்த வேலை இப்பொழுது சற்றுக் குறைந்திருக்கிறது. இருந்தாலும் இன்னும் எல்லாருக்கும் பூரணமான வேலை இருக்கிறது.

இதர உத்தியோகஸ்தர்கள்

மதுவிலக்குச் சட்டத்தின் 36வது செக்ஷன்படி எல்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் ஸ்தல ஸ்தாபன உத்தியோகஸ்தர்களும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி வைக்க ஒத்துழைக்க வேண்டும் என்று இருக்கிறது. இந்த உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காகச் சில விசேஷ முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஜில்லாவின் எல்லையில் காடுகள் அதிகமாய் இருப்பதால் காட்டிலாக்கா உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாயிருந்தது. இதற்காக ஒரு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டது. ரிவின்யூ இலாக்கா உத்தியோகஸ்தர்கள் தங்கள் சுற்றுப் பிரயாணத்தின்போது மதுவிலக்கு வேலை செய்தார்கள். கிராம உத்தியோகஸ்தர்களும் இந்த இயக்கத்தில் ஒரு முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டார்கள். குற்றங்கள் நடந்ததைப் பற்றியோ, அல்லது நடக்கப் போவதைப் பற்றியோ போலீசுக்குத்

தெரிவித்தார்கள். சில கிராம உத்தியோகஸ்தர்கள் கொஞ்சம் கண்டிப்பாய்ச் சொன்ன பிறகே ஒத்துழைத்தார்கள். ஆனல் மொத்தத்தில் பார்த்தால் அவர்களின் ஒத்துழைப்பு திருப்திகரமாக இருந்ததுடன் உபயோகமாயு மிருந்தது. ஜில்லா கல்வி அதிகாரியும், ஜில்லா போர்டுகளின் தலைவர்களும், கிராம உபாத்தியாயர்களை இந்த இயக்கத்துக்கு உதவிபுரிய வேண்டுமென்று சொல்லி யிருந்தார்கள். அவர்கள் பிரசாரம் செய்தும், வேடிக்கை விநோதங்கள் அமைத்துக் கொடுத்தும் ஒத்தாசை செய்தார்கள். கூட்டுறவு இலாக்காவும் மதுவிலக்கு இயக்கத்துக்கு மிகவும் உதவியாக இருந்து வந்திருக்கிறது. அதோடு விவசாய இலாக்கா, கால் நடை இலாக்கா, சுகாதார இலாக்கா உத்தியோகஸ்தர்களும் பல வழிகளில் ஒத்தாசை புரிந்து வந்திருக்கிருர்கள்.

நிர்மாண வேலை

மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதனுல் உள்ள பூரண நன்மையையும் ஜில்லா வாசிகள் அடையவேண்டுமென்பது சர்க்காரின் நோக்கம். ஆகவே மதுவிலக்கு இயக்கத்தின் நிர்மாண வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு தனி உத்தியோகஸ்தர் நியமிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். மிஸ்டர் டி. எல். ஆர். சந்திரன், ஐ. சி. எஸ். இதற்காக நியமிக்கப்பட்டு 1937 டிசம்பர் 4-ம் தேதி உத்தியோகம் ஒப்புக்கொண்டார். ஆனல் மிகவும் துரதிர்ஷ்டவசமாக வந்த 18 நாட்களுக்கெல்லாம் அவர் இறந்து

விட்டார். அவருக்குப் பதிலாக மிஸ்டர் ஜே. கி. ரையன், 1938 பிப்ரவரி 12ல் வேலையை ஒப்புக் கொண்டு மதுவிலக்கின் நிர்மாண வேலையில் ஈடுபட்டு, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்த ரல்லாதவர்கள் ஆகிய எல்லாருடனும் ஒத்துழைத்து வருகின்றார்.

ஜனத் தலைவர்களின் உதவி

இப்பேர்ப்பட்ட ஒரு சமூக முன்னேற்றச் சட்டத்தை மிகவும் வெற்றிகரமாக நடத்தி வைப்பதற்கு உத்தியோகஸ்தர் அல்லாத பொதுஜனத் தலைவர்களின் முழு ஒத்துழைப்பையும் பெறவேண்டியது அவசியம். சட்டத்தின் 25-வது பிரிவின்படி தாலூக்கா மதுவிலக்குக் கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் உட்பட்ட வட்டாரத்திலிருந்தும் நாலு நாலு அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு போலீஸ் வட்டாரமும், சுமார் எட்டு கிராமங்கள் கொண்டது. ஒவ்வொரு தாலூக்காவிலும், உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர் அல்லாதவர்களும் கலந்த செலக்ஷன் கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. இவர்கள் அந்தந்த வட்டாரத்தின் மதுவிலக்குக் கமிட்டியில் நியமிக்கப்பட வேண்டிய நபர்களைச் சிபார்சு பண்ணினார்கள். இந்த மதுவிலக்குக் கமிட்டிகள் அவ்வப்பொழுது கூட்டப்பட்டு அவர்கள் வேலை என்ன என்பது விளக்கப்பட்டது. அவையாவன :—

1. போலீஸுக்கு விஷயங்களைத் தெரிவிப்பது.

2. ஒவ்வொரு மாதமும் தங்கள் தாலூக்காவில் மதுவிலக்குச் சட்ட அமுல் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றிக் கலெக்டருக்கு அறிக்கை அனுப்புவது.

3. எல்லா வழிகளிலும் இவ்வியக்கத்துக்கு உதவியளிப்பது. முக்கியமாகப் பின்வரும் விஷயங்களில் :

i கிராம மதுவிலக்குக் கமிட்டிகள் தங்கள் வேலைகளைச் சரிவர செய்து கொண்டு வருகிறார்களா என்று கவனிப்பது.

ii குற்றம் நடக்கக்கூடிய இடங்களையோ, அல்லது குற்றம் செய்யக்கூடியவர்களையோ கண்காணித்துக் கொள்ளுவது.

iii குடியை மறப்பதற்காக வேடிக்கை, விநோதங்கள் ஏற்படுத்துவது; சிக்கன முறைகள் சொல்லிக் கொடுப்பது.

ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கிராம மதுவிலக்குக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. கிராம, தாலூக்கா மதுவிலக்குக் கமிட்டிகளின் உதவியினால் போலீஸார் கண்டுபிடித்த வழக்குகளின் எண்ணிக்கை பின்னால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலை மிகவும் கஷ்டமானதுமன்றிப் பிடிக்காததாகவும் இருந்தது. ஆனாலும் அநேகர் போலீஸாருக்கு இது விஷயத்தில் மிக்க உதவி புரிந்தனர். அவ்வப்பொழுது உளவறிந்து சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்ததோடு கிராமத்திலுள்ள நிலைமையைப் பற்றியும் போலீஸுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்

கள் கொண்டு வந்த வழக்குகளின் எண்ணிக்கையி லிருந்து இந்தக் கமிட்டி அங்கத்தினர்கள் செய்த வேலையை நிர்ணயிக்க முடியாது. ஏனெனில், இந்த வேலையில் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் வேறு முக்கியமான அநேக வேலைகள் செய்தனர். மது விலக்குச் சட்டத்தின் அமுலுக்கு ஆதரவாகப் பொதுஜன அபிப்பிராயம் பக்க பலமாக நிற்கும்படி அவர்கள் பிரசாரம் செய்தனர். பொதுவாக, சந்தேகப்பட்ட இடங்களில் உள்ளவர்களை யெல்லாம் அவர்கள் கண்காணித்துக் கொண்டதோடுகூட, குடியை மறப்பதற்காக வேடிக்கை விநோதங்களை ஏற்பாடு பண்ணுவதிலும், மக்களைச் சிக்கன முறைகளைக் கையாளுமாறு வற்புறுத்துவதிலும் பங்கெடுத்துக் கொண்டார்கள். எல்லாவற்றையும் விட, ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராமக்கமிட்டி படாடோபமின்றி இருந்து வேலை செய்து வந்ததானது குடிப் பழக்கத்திற்கு விரோதமாகப் பொதுஜன ஆதரவை வளர்த்து வந்தது மட்டுமல்லாமல், குடிக்கக் கூடியவர்களையும் குற்றம் புரிந்தால் எங்கே சொல்லிக் கொடுத்து விடுவார்களோ என்ற பயத்தினால் சட்டத்தை மீறாமல் தடுத்தது.

காங்கிரஸ் ஊழியர் சேவை

அநேக காங்கிரஸ் ஊழியர்கள் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டிகளில் அங்கத்தினர்களா யிருந்தார்கள். அவர்கள் மதுவிலக்கு வேலையில் அதிக ஊக்கம் எடுத்துக் கொண்டதோடு, சிறப்பாகப் பிரசார வேலை அதிகம் செய்திருக்கிறார்கள். ஜில்லாவின் தென் பாகத்தில் சில காங்கிரஸ் ஸ்தாபனங்கள் போலீஸுக்கு மிக்க

உத்வியாயிருந்தன. சில அங்கத்தினர்கள் தங்களுக்கு ஏற்படும் ஆபத்தைக்கூடக் கவனிக்காமல் முழு ஊக்கத்துடன் வேலை செய்தனர்.

கண்டுபிடித்த குற்றங்கள்

இந்த ஒரு வருஷத்தில் மது விலக்குச் சட்டத்துக்கு விரோதமான 1,335 குற்றங்களைப் போலீஸார் விசாரித்திருக்கிறார்கள். இந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்தவர்களின் விவரம் வருமாறு :

	எண்ணிக்கை		சத விகிதம்
மது விலக்குக் கமிட்டி அங்கத்தினர்	61	அதாவது	4·6
காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள்	11		.08
கிராம உத்தியோகஸ்தர்கள்	104	,,	7.80
இதர இலாக்கா உத்தியோகஸ்தர்கள்	40	,,	3.00
உளவாளிகள்	449	,,	34.00
போலீஸ்காரர்கள்	671	,,	50.00

சட்டம் வெற்றி யடைவதற்குப் பொது ஜனங்கள் மிக மிக நன்றாய் ஒத்துழைத்திருக்கிறார்கள். இவர்கள் கிராமங்களில் குடிக்கு விரோதமாக அபிப்பிராயம் ஏற்படும்படி செய்தார்கள். இதனால் சட்டத்தை மீற எண்ணம் கொண்டவர்கள் தாங்கள் சட்டத்தை மீறினால் போலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப் படுவதோடுகூட, தங்களுடைய ஜாதிக்

காரர்களால் வெறுக்கப்பட்டுப் பகிஷ்கரிக்கப்படக் கூடும் என்றும் பயந்தார்கள்.

மொத்தத்தில் விசாரிக்கப்பட்ட 1,335 குற்றங்களில் பாதிக்கு மேற்பட்டவை கஞ்சா அபினி சம்பந்தமானவை; 110 திருட்டுப் பட்டைச் சாராயம் இறக்கியதைப் பற்றியவை; 99 திருட்டுப் பட்டைச் சாராயம் வைத்துக் கொண்டிருந்த குற்றங்கள்; மைசூரிலிருந்து திருட்டுத்தனமாக மதுபான வகைகள் கொண்டு வந்ததாக 70 குற்றங்கள்; சாராயத்தை வைத்துக் கொண்டிருந்ததும், இடம் விட்டு இடம் கொண்டு போனதும் 81 கேஸ்கள்; போதை வஸ்துக்களும் மதுபானங்களும் சாப்பிட்டதாக 104 கேஸ்கள்; மரம் ஏறிக் கள் இறக்கியதாக 170; இதில் 104 லைசென்ஸ் வாங்காமல் பதனி இறக்கியதும், இன்னும் லைசென்ஸை மீறி நடந்ததைப் பற்றியவையுமாகும். 81 கேஸுகள் தீர விசாரித்த போது பொய்க் கேஸ் என்றோ, போதுமான சாட்சியம் இல்லையென்றோ தள்ளப்பட்டன.

திருட்டுச் சாராயம்

முதலில் எதிர்பார்த்ததுபோல் வெளியிலிருந்து ஏராளமாகச் சாராயம் ஒருவரும் கொண்டு வரவில்லை. பெரும்பான்மையான குற்றங்கள் மைசூர் எல்லையில் நடந்தன. தான் குடிப்பதற்காகவாவது, அல்லது பிறர் வியாதிக்குக் கொடுப்பதற்காகவாவது துணியில் மறைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வரப்பட்டது. பிரிட்டிஷ் எல்லையில் உள்ள ஜில்லா

பட்டைச் சாராயக் கடைக்காரர்கள், பட்டைச் சாரா யத்தைக் கடையிலேயே சாப்பிட வேண்டும் என்ற விதிக்கு உட்பட்டு நடந்தார்கள். இதனுல் இந்தப் பக்கத்தில் அதிகக் குற்றங்கள் இல்லை. எல்லை யைக் கண்காணிப்பதில் உத்தியோகஸ்த ரல்லாதவர் கள் உத்தியோகஸ்தர்களுடன் மிகவும் ஒத்துழைத் தார்கள்.

திருட்டுச் சாராயம் காய்ச்சுவது இந்த வருஷம் நிறுத்தப்பட்டுப் போனது மிகவும் ஆச்சரியமான விஷ யம்தான். மதுவிலக்குக்கு முன்னுல் திருட்டுச் சாரா யம் காய்ச்சுவது மிகவும் அதிகமா யிருந்தது. இக் குற்றத்தின் எண்ணிக்கை சராசரி 265 ஆகும். ஆனுல் பிரஸ்தாப ஒரு வருஷத்தில் 110 பேர்கள் தண்டனை யடைந்தனர். எனினும், அநேகமாக இக் குற்றம் அடங்கி விட்டதென்றே சொல்ல வேண்டும். இப்ப டிக் குறைந்ததற்குக் காரணங்களாவன :—

1. போலீஸார், பழைய ஆப்காரி குற்றவாளி கள் 1925 பேர், பெருங் குடியர்கள் 6758 பேர் ஆகிய இவர்களின் பெயர்களைப் பதிந்து வைத்துக் கொண் டார்கள்.

2. முன்பு சாராயம் காய்ச்சியவர்களின் பெயர் களையும் பதிந்து வைத்துக் கொண்டார்கள். ஏனெனில் திருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்கள் இவர்களில் சில ராய்த்தான் இருக்க வேண்டும்.

3. இதற்கு முன்னுல் திருட்டுச் சாராயம் காய்ச்சி வந்தவர்களும், பெருங் குடியர்களும் எல்லா ருக்கும் தெரிந்தவர்கள்.

4. உத்தியோகஸ்தர்களும், பொது ஜனங்களும் சேர்ந்து உழைப்பதில் இரண்டு விதத்தில் பயன் ஏற்படுகிறது. ஒன்று, குற்றம் செய்யாமல் தடுத்து விடுகிறது; இல்லாவிடில், அப்படி அவர்கள் குற்றம் செய்து விட்டால், அவர்களைப் பிடிப்பதற்குச் சௌகரியமா யிருக்கிறது.

5. முன்பெல்லாம் காடுகளில்தான் திருட்டுச் சாராயம் காய்ச்சுதல் அதிகமா யிருந்தது. ஆனால் இப்பொழுதோ காடுகள் காட்டிலாக்கா அதிகாரிகளால் கண்காணிக்கப்படுகின்றன. பஞ்சாயத்துக் காடுகள் பகிரங்கமாக இருப்பதால் ஒன்றும் திருட்டுத்தனமாகச் செய்ய முடியாது.

6. அநேகமாக எல்லாக் குடியர்களும் குடிப்பதை விட்டுவிட்டதால், திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறவர்களிடமிருந்து ஏதாவது சில பெருங் குடியர்களே வாங்கிக் குடிப்பார்கள். அவர்களும் சீக்கிரம் அகப்பட்டுக்கொண்டு விடுவார்கள்.

7. இம்மாதிரி சாராயம் காய்ச்சுவது அவ்வளவு சுலபமாக எல்லாரும் செய்யக் கூடியதல்ல. சிலருக்குத்தான் அந்த முறைகள் தெரியும். அதோடு இதற்கு ரூ. 5 முதல் ரூ. 10 வரையில் மூல தனம் வேண்டும். இம்மாதிரி பழக்கமும், பணமும் உள்ளவர்கள் எல்லாருக்கும் தெரிந்தவர்கள். அவர்களை அநேகர் கண்காணித்துக்கொண்டு வருகிறார்கள். போலீஸார் கண்டு பிடித்த 110 கேசுகளில் 82 கேசுகளுக்குக் காரணமா யிருந்தவர்கள் எல்லாருக்கும் தெரிந்தவர்களும், முன்பு சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்தவர்களுமாவர்.

8. இப்படிக் காய்ச்சப்படும் சாராயத்துக்குப் புளித்த கள் அவசியம். ஆனால் அது இப்பொழுது கிடைப்பதில்லை.

9. முன்பெல்லாம் திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறவன் கலால் அதிகாரிகளைக் கண்டோ, அல்லது உளவு சொல்லிக் கொடுக்கிறவர்களைக் கண்டோ தான் பயப்பட்டுக் கொண்டு வந்தான். ஆனால் அவன் இப்பொழுது தாலூக்கா - கிராம மதுவிலக்குக் கமிட்டிகள், மற்றப் பொதுஜனத் தலைவர்கள், மதுவிலக்கு ஊழியர்கள், முன்னைவிட அதிக ஜரூராய் இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள், காட்டிலாக்கா உத்தியோகஸ்தர்கள், இதர இலாக்கா உத்தியோகஸ்தர்கள் இவ்வளவு பேருக்கும் பயப்படவேண்டி யிருக்கிறது. முன் கலால் இலாக்கா உத்தியோகஸ்தர்களைக் காட்டினும் அதிகமான போலீஸ்காரர்களின் கண்காணிப்பும் இருக்கிறது. இது எல்லாவற்றையும் விடப் பொதுஜன அபிப்பிராயம் சாராயம் காய்ச்சுகிறவனுக்கு விரோதமாக இருக்கிறது. யார் வேண்டுமானாலும் அவனைக் காட்டிக் கொடுத்துவிடலாம். இன்னும் திருட்டுச் சாராயத்தை லைசென்ஸ் பெற்றது என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. அதோடு கோர்ட்டுக்குப் போனால் கடுமையான சிறைத் தண்டனை கிடைக்கும் என்று தெரியும். ஆகவே மது விலக்கு இயக்கத்தையே அடியோடு அழித்து விடலாம் என்று சிலர் கருதிய இக் குற்றம் போலீஸாரின் முயற்சியினாலும், பொது ஜனங்களின் ஒத்துழைப்பினாலும் அநேகமாக ஒடுக்கப்பட்டு விட்டது. ஆனாலும் இது திரும்பவும் ஆரம்பித்துவிடாத படி ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டி

யது அவசியம். பழைய கலால் இலாக்காவின் அனுபவத்தின்படி கண்காணிப்பு சற்றுக் குறைந்தால் இக் குற்றங்கள் திரும்பவும் மலிந்துவிடும்.

திருட்டுக் கள்

போலீஸார் இந்த ஜில்லாவில் 3,47,793 தென்னை மரங்கள், 2,54,25,702 பனை மரங்கள், 30,718 ஈச்ச மரங்கள் இருக்கின்றன என்று கணக்கெடுத்திருக் கிறார்கள்.

இதில் பதனி இறக்குவதற்கு லைசென்ஸ்கள் 4,145 தென்னை மரங்கள், 3,82,661 பனை மரங்கள், 103 ஈச்ச மரங்கள் இவற்றிற்குக் கொடுக்கப்பட்டன. இவை எல்லாவற்றிலும் எப்போதும் பதனி இறக்கப் படவில்லையானாலும், ஒரே சமயத்தில் பதனி இறக் கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை, 2,882 தென்னை மரங்கள், 1,94,648 பனை மரங்கள், 74 ஈச்ச மரங்கள் ஆகும்.

இந்த எண்ணிக்கைகளைப் பார்க்கும்போது திருட் டுக் கள் இறக்கின குற்றங்கள் **170** தான் என்பது மிக வும் ஆச்சரியம் அளிக்கிறது.

அவற்றில் 104 வழக்குகள் வெறும் சட்டசம்பந்த மானவை; அதாவது லைசென்ஸ் வாங்காமல் இருந் தது, அல்லது லைசென்ஸுக்கு மீறி நடந்தது முதலி யன. **66** வழக்குகள்தான் கள் இறக்கியதைப்பற் றியோ, அல்லது பதனியைக் கள்ளாக மாற்றியதைப் பற்றியோ ஆகும். மதுவிலக்குக்கு முன் சராசரி **470**

வழக்குகள் இருந்ததற்கு இது எவ்வளவோ குறைவு என்றுதான் சொல்லவேண்டும்.

குடிப்பழக்கம் அதிகமா யிருந்த ஒரு ஜில்லாவில் பதனி இறக்குவதற்காக லைசென்ஸ்கள் ஏராளமாக வழங்கப்பட்டபோது மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவது கஷ்டம் என்று சிலர் நினைத்தார்கள். ஆனால் வழக்குகள் மிகவும் குறைந்து விட்டதோடு, மதுவிலக்குக்கு முன்பு இருந்த வழக்குகளில் ஏழில் ஒரு பங்கு தான் இப்போழுது இருக்கிறது. இந்தத் திருப்திகரமான நிலைமை ஏற்பட்டதற்குப் பின் வருபவை காரணங்களாகும்:

1. மதுவிலக்குக்கு முன்னால் கள் இறக்கப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை 1,09,922; ஆனால் பனை மரங்களின் எண்ணிக்கை 1,442 தான். இதிலிருந்து அநேகமாக எல்லாக் கள்ளும் தென்னை மரத்திலிருந்துதான் வந்தது, பனங் கள்ளை ஒருவரும் விரும்பவில்லை யென்று தெரிகிறது. ஆனால் மதுவிலக்கு வந்த பிறகு தென்னை மரங்களுக்காகக் கொஞ்ச லைசென்ஸ்கள் தான் கோரப்பட்டன. பெரும்பான்மையான லைசென்ஸ்கள் பனை மரங்களுக்காகவே கேட்கப்பட்டன. அதோடு இந்த மரங்களிலிருந்து மதுவிலக்குக்கு முன்னாலேயே பதனி இறக்கிக்கொண்டிருந்தார்கள். மரம் ஏறுகிறவர்கள் இம்மாதிரி பதனி இறக்கியது, அதை அப்படியே சாப்பிடுவதற்கும், அல்லது அதிலிருந்து வெல்லம் எடுப்பதற்கும் தான். தென்னை மர லைசென்ஸ்கள் எல்லாம் அநேகமாக வெல்லம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களால் எடுக்கப்பட்டவை. அவர்கள் எல்லாப் பதனியையும் வெல்லம் காய்ச்சுவதற்கு உபயோகித்துக் கொண்டு

வருகின்றனர். இப்போதுள்ள சட்டத்தின்படி தென்னை மர லைசென்ஸ்கள் எல்லாம் இம்மாதிரி கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் கொடுக்கப்படும்.

2. ஜனங்களுக்குப் பனங் கள் குடித்துப் பழக்கமில்லை. ஆகவே பனைப் பதனியைக் கள்ளாக மாற்றுவதற்கு அதிகமாக ஒருவரும் விரும்பவில்லை. ஆகவே பதனியைக் கள்ளாக மாற்ற அதிக முயற்சிகள் நடக்கவில்லை.

3. மதுவிலக்குக்கு முன்னுல் கள் இறக்கிக் கொண்டிருந்தவர்கள் மற்ற ஜில்லாக்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் மதுவிலக்கு வந்ததும் தங்கள் ஜில்லாக்களுக்குப் போய் விட்டனர். இங்கேயே இருந்தவர்களில் சிலர் பதனி இறக்க லைசென்ஸ் பெற்றுக் கொண்டார்கள். சிலர் விவசாயம் போன்ற வேறு வேலைகளுக்குச் சென்றனர். (இவர்களில் அநேகர் நிலம் வைத்திருந்தார்கள்.) இன்னும் சிலர் தோப்புகளைக் கவனித்துக் கொண்டனர்.

4. மதுவிலக்குச் சட்டத்தை நடத்தி வைப்பதில் மரத்தின் சொந்தக்காரர்களும் பொறுப்பு ஏற்க வேண்டி வந்ததால், மரம் ஏறுகிறவர்கள் சட்டத்துக்குட்பட்டே நடந்து கொண்டார்கள்.

5. மதுவிலக்குச் சட்டம் ஏற்படுவதற்குமுன் ஆப்காரி குற்றஞ் செய்தவர்களைப் பணம் கொடுத்து ராஜியாகப் போக அனுமதிப்பதுண்டு. ஆனல் இப்பொழுதோ என்ருல் சிறைத் தண்டனை நிச்சயம்.

6. கிராம உத்தியோகஸ்தர்களும், கிராம மதுவிலக்குக் கமிட்டி அங்கத்தினர்களும், இன்னும்

போலீஸ்காரர்களும் மரம் ஏறுகிறவர்களை யெல்லாம் கவனித்துக் கொண்டு வந்தார்கள். போலீஸ்காரர்கள் ஜில்லாவிலுள்ள எல்லா மரங்களையும் பரிசோதித்துக் கொண்டு வந்தார்கள். சட்டியில் கொஞ்சமாகச் சுண்ணும்பு தடவியதற்காகத் தங்கள்மீது போலீசார் குற்றஞ் சாட்டி விடுவார்களோ என்று பயந்து கொண்டு அவர்கள் அளவுக்கு மீறிய சுண்ணும்பு தடவி வைத்தார்கள்.

போலீஸ்காரர்கள் அநேக லட்சம் மரங்களைப் பரிசோதனை செய்தார்கள். அவர்கள் அடிக்கடி பரிசோதனை பண்ணுவதில் பானையை எடுத்துக் காட்டுவதற்காகவே மரம் ஏறி, இறங்கி, அலுத்துப் போய் விட்டதென்று சில மரமேறிகள் புகார் செய்தார்கள்.

7. பெரும் குடியர்கள் அதிகமாயுள்ள சில இடங்களில் பதனியில் என்னென்னமோ வஸ்துக்களைக் கலந்து கள் உண்டாக்கினுர்கள் என்று 28 வழக்குகள் கிடைத்தன. ஆனல் இந்தக் கள் சாப்பிட ருசியாய் இல்லாததோடு வயிற்று வலியையும் உண்டு பண்ணியது. ஏராளமாகப் பதனி இறக்கப்படுகிறதென்பதைக் கவனிக்கும்போது இப்படிப் பதனியிலிருந்து கள் இறக்குவது மிகவும் குறைவு என்றே சொல்ல வேண்டும். இந்த முறை அவர்களுக்குப் பலனளிக்கவில்லை.

8. பதனி இறக்குபவர்களை உத்தேசித்துச் சில வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலமாகப் பதனி இறக்குபவர்களைக் கவனித்துக்கொள்ள முடிந்தது.

9. பொதுஜன அபிப்பிராயம் கள் இறக்குவதற்கு விரோதமாக இருந்தது.

இதனுலெல்லாம் பதனி இறக்குவது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே நடந்து வருகிறது. தவிர, பதனியிலிருந்து கள் காய்ச்சுகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் சொல்பமாய்ப் போயிற்று.

அன்னிய நாட்டு மது

இந்த அம்சத்தின் கீழ் 11 கேசுகள் தான் வந்தன; அவை முக்கியமானவையுமல்ல.

சொந்த உபயோகத்திற்கு 96 அனுமதிச் சீட்டுகளும், கிளப்புகளுக்கு இரண்டு அனுமதிச்சீட்டுகளும் வழங்கப்பட்டன.

கள்ளுக்குப் பதில்

கள் சாராயத்துக்குப் பதிலாக, விளக்கு ஏற்றுவது முதலிய காரியங்களுக்கு உபயோகமாகும் விஷங் கலந்த எரி திராவகத்தை (denatured spirits) சாப்பிடக் கூடாதென்று பிரசங்கங்கள் செய்து, துண்டுப் பிரசுரங்கள் மூலமும் பிரசாரம் செய்யப்பட்டது. ஆனுலும் சில பழைய குடியர்கள் அத்தகைய எரி திராவகங்களைச் சாப்பிட ஆரம்பித்தார்கள். 1937, 1938-ல் அது விற்கப்பட்டிருக்கும் கணக்கைப் பார்த்தால் இந்த மார்ச்சு மாதத்திலிருந்து ஆகஸ்டு மாதத்துக்குள் அது அதிகமாக விற்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஜூன் மாதத்தில் அதன் விற்பனை ரொம்ப அதிகமா யிருந்தது. இதைத் தடுப்பதற்கு இப்பொழுது பெரு முயற்சி எடுத்துக்கொண்டு வரப்

படுகிறது. நான் சென்ற மாத அறிக்கையில் எதிர் பார்த்தபடி, நாம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி கள் பலன் அளித்திருக்கின்றன. செப்டம்பர் மாத விற்பனை, மது விலக்குக்கு முந்திய பழைய நிலை மைக்கு வந்திருக்கிறது. எரி திராவகங்களைப் பற்றிச் சில புதிய விதிகள் ஏற்படுத்துவது அவசியமென்று தெரிந்தது. இவற்றைச் சர்க்கார் அங்கீகாரம் அளிப் பதை எதிர்பார்த்து லைசென்ஸ்கள் வைத்துக் கொண்டி ருந்தவர்கள் எல்லாரும் எச்சரிக்கை செய்யப்பட் டார்கள். போலீஸ்காரர்களும் இக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்குப் பிரத்தியேக வழிகள் ஏற்படுத் திக் கொண்டார்கள். சர்க்காரால் இப்பொழுது அங் கீகரிக்கப்பட்டு விட்ட அந்தப் புதிய விதிகளாவன:—

1. எரி திராவகம் வாங்கும் மனிதனின் முழு விவரங்களும், அவன் எதற்காக வாங்குகிறானென்னும் விவரமும் ஒரு ரிஜிஸ்தரில் குறிப்பிட வேண்டியது.

2. அநுமதி பெற்றுத்தான் எரி திராவகம் ஜில்லாவுக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

3. குறிப்பிட்ட சில இடங்களில் எரி திராவக விற்பனையைக் கட்டுப்படுத்துவது.

இந்த விதிகளும், போலீஸ் கண்காணிப்பும் சேர்ந்தால் எரி திராவகம் சாப்பிடும் வழக்கம் நின்றுவிடும். இந்தச் சங்கடம் இப்பொழுது கட்டுப் படுத்தப்பட்டு விட்டது என்றே சொல்லலாம்.

கஞ்சா வழக்கம்

முக்கியமானதும், இன்னும் தீராமல் இருக்கிறது மான விஷயம் கஞ்சா சாப்பிடுவதை நிறுத்துவது

தான். மதுவிலக்குக்கு முன் இருந்த நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்பொழுது இருப்பது ஒன்றுமில்லை யென்று சொல்லலாமென்றாலும், இப்பொழுது ஏற்படும் வழக்குகளில் பாதி வழக்குகள் கஞ்சா வழக்குகள்தான். கஞ்சா அபினி திருட்டுத்தனமாகக் கொண்டு வரப்படுவதைத் தடுப்பது மிகவும் கடினம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். மேல் நாடுகளில் எத்தனையோ வருஷங்களாக, எவ்வளவோ முயற்சி செய்தும் இதை நிறுத்த முடியவில்லை. சேலத்தில் திருட்டுக் கஞ்சா கொண்டு வருவதற்கு வசதி அதிகமா யிருக்கிறது. ஏனெனில் சேலத்தின் எல்லையிலுள்ள மைசூரில் உயர்ந்த கஞ்சா மிகவும் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. அதோடு மதுபானத்தைவிடக் கஞ்சாவை விடுவது கடினம். இன்னும், கஞ்சாவைக் கொஞ்சமாகக் கொண்டு போனால் வெகு எளிதில் மறைத்து விடலாம். மிகவும் கடுமையான சோதனை போட்டால் தான் அது இருப்பது தெரியும். கஞ்சாக் குற்றங்கள் ஜில்லா முழுவதும் நடந்தன. அதிலும் நெசவுகாரர்கள் உள்ள இடங்களில் அதிகம். மொத்தம் 614 வழக்குகள் நடந்தன. இவற்றில் 562 வழக்குகளில் சொந்த உபயோகத்துக்காக மிகக் கொஞ்சமாகத்தான் கஞ்சா வைத்துக் கொண்டிருந்தார்கள். பாக்கி வழக்குகளில் அகப்பட்ட கஞ்சா 3 தோலாவும், அதற்கு மேலும் இருந்தது. மதுவிலக்கு அமுலில் இல்லாத இடங்களில் அதிகப்படியாக வைத்துக் கொள்ளக்கூடிய கஞ்சா 3 தோலா. பறிமுதல் செய்யப்பட்ட மொத்த கஞ்சா 1879 தோலா. இதில் 1127 தோலா மைசூரிலிருந்து வந்தது.

• திருட்டுக் கஞ்சா இறக்குமதியானது இந்த வேலையில் கைதேர்ந்தவர்களால் வெகு காலமாக நடத்தப்பட்டு வருகிற காரியமா யிருப்பினும், போலீஸ் காரர்கள் இக் குற்றத்தைக் கண்டு பிடிப்பதில் நாளுக்கு நாள் கெட்டிக்காரர்களாகி வருகிறார்கள். சமீபத்தில் பிடிபட்ட சில வழக்குகளில் மைசூர் கஞ்சா என்று அடையாளங் கண்டு பிடிக்கப் பட்டதில், அப்படியே உடையாமல் ஒரு பாறையாய் 20 தோலாவுக்கு மேலேயே எடை உள்ளதாய் இருந்தது. இதிலிருந்து மைசூர் கஞ்சா வியாபாரிகள், இந்த ஜில்லா கஞ்சாத் திருட்டு வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுடன் ஒத்து வேலை செய்கிறார்கள் என்று சொல்லாவிடினும், தனி நபர்கள் வைத்துக் கொள்ள வேண்டிய அளவைமீறி மைசூர் கஞ்சா வியாபாரிகள் நடக்கிறார்கள் என்று நன்கு தெரிகிறது.

இந்த ஜில்லாவில் உபயோகமாகும் கஞ்சா பெரும்பான்மை மைசூரிலிருந்து வந்தது என்று தெரிந்த போது இது விஷயத்தைக் குறித்து மைசூர் அதிகாரிகளிடம் பேசுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. நானும் ஜில்லா போலீஸ் சூப்பிரண்டும் பெங்களூருக்குப் போய், மைசூர் கஞ்சா வியாபாரிகள் ஒருவருக்கு இவ்வளவுதான் விற்கலாம் என்று சட்டத்தில் கண்டிருக்கும் அளவுக்கு மேலேயே விற்கிறார்கள்; அது சேலத்தில் கள்ளத்தனமாக வந்துகொண்டிருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவித்தோம். மைசூர் அதிகாரிகள் இதைத் தடுப்பதற்குத் தாங்கள் ஒத்துழைப்பதாகச் சொன்னார்கள். கள்ள கஞ்சா வியாபாரத்தைத் தடுக்க அவசியமான முறைகளை அவர்கள் கையாளப் போவதாகவும் வாக்களித்தார்கள்.

மைசூர் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளினுல் சேலத்திற்குத் திருட்டுத்தனமாகக் கொண்டுவரப்படும் கஞ்சா குறையுமென்று நம்புகிறேன்.

இத்தனை கஷ்டங்கள் இருந்தபோதிலும் போலீஸ்காரர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், கிராமக் கமிட்டி மெம்பர்கள் இவர்களுடைய ஒத்தாசையுடன் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பலன் அளித்திருக்கின்றன. கஞ்சா திருட்டுத்தனமாகக் கொண்டு வருகிறுர்கள் என்று சந்தேகப்பட்டவர்களை யெல்லாம் ஒரு ஜாப்தா தயாரித்து அவர்களைக் கண்காணித்து வந்தார்கள். எல்லைப் புறத்தில் உள்ள இடங்களிலும் கண்காணிப்பு நடந்துகொண்டு வந்திருக்கிறது. கஞ்சா சாப்பிடுகிறுர்கள் என்று சந்தேகப்பட்டவர்களுக்குப் பக்கத்தில் குடியிருக்கிறவர்களை ஏதாவது கஞ்சாப் புகையின் வாசனை வருகிறதா என்று கவனிக்கும்படி சொல்லி யிருந்தார்கள். கஞ்சா குடிப்பவர்கள் யார் யாரென்று கண்டுபிடிக்க முயற்சிகள் செய்யப் பட்டன. மதுவிலக்கு ஆரம்பித்ததிலிருந்து அநேகர் கஞ்சா சாப்பிடும் வழக்கத்தை விட்டு விட்டார்கள். போலீஸில் பழைய கைதிகளுக்காகவும் சந்தேகப்பட்ட நபர்களுக்காகவும் ஜாப்தா வைத்திருப்பதுபோல் மதுவிலக்குச் சட்டம் மீறுபவர்கள் ஜாப்தாவும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நபர்கள் உள்ள கிராமங்களைப் போலீஸார் அடிக்கடி போய்ப் பார்வையிட்டு வருகின்றனர். கஞ்சாவுக்கு அடிமையா யிருந்தவர்கள் பலர் மதுவிலக்குக்குப் பிறகு அந்த வழக்கத்தை அடியோடு கைவிட்டிருப்பது மிகவும் திருப்திகரமான விஷயம். இன்னும் அநேகர் தாங்கள்

சாப்பிடும் அளவைக் குறைத்து விட்டனர். கஞ்சா வழக்கத்தை முழுவதும் ஒழிப்பதற்கு இன்னும் நாள் பிடிக்கும். இதைப் பற்றின வரையிலும் நிலைமை அவ்வளவு திருப்திகரமானதா யில்லாவிட்டாலும், முன்பு குடித்துக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, இப்போது கஞ்சா சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்பதையும், குடிக்குப் பதிலாகக் கஞ்சா சாப்பிடும் வழக்கம் ஏற்படவில்லை யென்பதையும் கவனிக்க வேண்டும்.

அபின்

அபின் சாப்பிடுகிறவர்கள் அனுமதிச் சீட்டு இருந்தால், தங்களுக்கு வேண்டிய அபினியைத் தாலூக்கா ஆபீஸ், டெபுடி தாசீல்தார் ஆபீஸ் முதலியவற்றிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று ஏற்பாடு. இந்த ஒரு வருஷத்தில் அபினிச் சட்டத்தை மீறியவர்கள் 71 பேர்களாகும். இந்த எண்ணிக்கை இன்னும் குறைந்திருக்கும். ஆனால் வியாபாரிகள் அபினி சாப்பிடுகிறவர்கள் என்று கொடுத்த ஜாப்தாவில் எத்தனையோ நபர்களின் பெயர்கள் இல்லை. மதுவிலக்குக்கு முன்னால் அபினி சாப்பிடுகிறவர்கள் வேலைக்காரர்கள் மூலமாகவும், சிநேகிதர்கள் மூலமாகவும் அபினி வாங்கிக் கொண்டு வருவது வழக்கம். இப்பொழுது அனுமதி பெறாமல் இருப்பவர்களை யெல்லாம் அனுமதி பெறும்படி செய்துகொண்டு வருகிறோம். இந்த அபினி வழக்கத்தை விடுவது மிகவும் கஷ்டமாயினும் சில பேர் கொஞ்சம் கொஞ்சமாக இதைக் குறைத்துக் கொண்டு வந்து, கடைசியில் இவ்வழக்கத்தை அடியோடு விட்டு

விட்டார்கள் என்று தெரிகிறது. கிருஷ்ணகிரி தாலூக்காவைச் சேர்ந்த ஒரு பிராமணரும், நாமக்கல் தாலூக்காவைச் சேர்ந்த ஒரு முஸ்லிமும் இம்மாதிரி தங்கள் வழக்கத்தை விட்டு, தங்கள் அனுமதிச் சீட்டுகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அநேகர் தாங்கள் முன்பு சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் குறைத்து இப்பொழுது ஆறில் ஒரு பங்கே உபயோகிக்கின்றனர். இப்பொழுது அபினி உபயோகப்படும் அளவு ஒரே நிலையிலும், ஆனால் மதுவிலக்குக்கு முன் இருந்த நிலைக்கு எவ்வளவோ குறைந்தும் இருக்கிறது. இதிலிருந்து அபினி சாப்பிடுகிறவர்கள் பலர் தங்கள் வழக்கத்தை விட்டுவிட்டார்கள் என்று தெரிகிறது.

எல்லைப்புறப் பிரச்னைகள்

மதுவிலக்கு ஆரம்பித்த சமயத்தில் எல்லைப்புறங்களில் உள்ள கிராமங்களில் உள்ள அநேகர் எல்லையைக் கடந்து சென்று குடித்து விட்டு வந்தார்கள். ஆனால் அந்த எண்ணிக்கை வர வரக் குறைந்து கொண்டு வருகிறது. நடுவில் காவேரியைக் கடக்க முடிந்தபோது கோயமுத்தூர் ஜில்லாவுக்கும், திருச்சினுப்பள்ளி ஜில்லாவுக்கும் கொஞ்சம் அதிகமாகப் போனார்கள். ஆனால் காவிரியில் இப்பொழுது திரும்பவும் ஜலம் வந்து விட்டபடியால் இம்மாதிரி போகிறவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. மைசூர் எல்லையிலும் இந்த மாதிரி செல்லுகிறவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. அங்குள்ள கடைகளின் வியாபாரமும் குறைந்து வருகிறது. வட ஆர்க்காடு, திருச்சினுப்பள்ளி, கோயமுத்தூர் எல்லைகளில் உள்ள 7 கள்ளுக் கடைகளை மூடிவிட வேண்டு

மென்று சர்க்கார் உத்தரவிட்டு விட்டனர். சமீப காலத்தில் குடிப்பதற்காக ஜில்லா எல்லையைத் தாண்டிப் போகிறவர்களின் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணங்களாவன :—

1. குடிக்கும் ஆசை கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்துகொண்டு வருகிறது.

2. அப்படிக் கடந்து செல்வதால் பண விரயமும் கால விரயமும் ஆகிறது.

போலீஸ் குற்றங்களின் எண்ணிக்கையாவது:—

மது விலக்குக்கு முன் 5 வருஷங்களின் சராசரி	938
இந்த வருஷம்	836
தனி நபர்கள் அடிதடி- வழக்குகள் (9 மாதங்கள் 1936-7)	653
9 மாதங்கள் 1937-8	501

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து குற்றம் நிச்சயமாகக் குறைந்திருக்கிறது என்று கருதலாம்.

முன்னேற்ற வேலை

இந்த ஒரு வருஷத்தில் எட்டு மாத காலம் இதற்கென்று ஒரு தனி உத்தியோகஸ்தர் இருந்து வந்திருக்கிறார். மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்து விட்டால் மட்டும் போதாது என்று சர்க்கார் கருதினர். மதுவிலக்கினால் உண்டாகும் பூரண நன்மையையும் கிராம ஜனங்கள் அடையவேண்டும் என்று விரும்பினர். இதற்காக வகுக்கப்பட்டுள்ள நிர்மாண வேலை யாவது :—

1. மதுவிலக்கு ஏற்பட்டால், கஷ்டப்படுகிறவர்களுக்கு அவசியமானபொழுது உதவி செய்தல்.

2. முன்னால் குடித்து வந்தவர்களை அவர்கள் குடியில் செலவழித்துக் கொண்டிருந்த பணத்தை நல்ல வழியில் செலவழிக்கும்படி தூண்டுவது.

3. சாயந்திர வேளைகளில் பொழுது போவதற்காக ஏதாவது வேடிக்கை விநோதங்கள் ஏற்படுத்துவது.

4. பொது கிராம முன்னேற்ற வேலை.

மரம் ஏறுகிறவர்கள்

மதுவிலக்கினால் ஏராளமாய் பாதிக்கப்பட்டவர்கள் கள்ளிறக்கும் தொழில் செய்து வந்தவர்களே யாவர். இவர்களைப் பற்றிய பிரச்னையும் முதலில் மிகவும் கஷ்டமாய்த்தான் தோன்றிற்று. ஆனால் கடைசியில் மிகவும் சுலபமாகவே தீர்ந்துவிட்டது. முதலில் பலருக்கு வேலையில்லாமல் போய் விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பின்வரும் காரணங்களினால் நிலைமை அப்படியாகவில்லை:

பூராவாக விசாரித்ததில் 14,000 மரமேறிகள் இந்த ஜில்லாவில் வசிக்கிறார்கள் என்று தெரிகிறது. இவர்களில் 8785 பேர் பனை மரங்களிலிருந்து பதனி இறக்குவதற்கு மாத்திரம் லைசென்ஸ் பெற்றிருந்தார்கள். கள் இறக்குவதில் ஈடுபட்டிருந்த பாக்கிப் பேர் மற்ற ஜில்லாக்களிலிருந்து வந்து சேலத்தில் குடியேறியவர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் மது

விலக்கு ஆரம்பமானதும் தங்கள் தங்கள் ஜில்லாக்களுக்குத் திரும்பிப் போய்விட்டார்கள். பாக்கிப் பேரில் கள் இறக்கிக் கொண்டிருந்த 1640 பேர் பதனி இறக்க லைசென்ஸ் பெற்றுக் கொண்டார்கள். 1800 பேர் வேறு இடத்தில் வேலை செய்வதற்குப் போய்விட்டார்கள். இப்பொழுது லைசென்ஸ் அளிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பான்மையோர் மதுவிலக்குக்கு முன்னும் பதனி இறக்கிக் கொண்டிருந்தவர்கள்தான். மரமேறிகளில், அநேகருக்கு நிலம் இருக்கிறது. முன்பு அதைக் குத்தகைக்கு விட்டிருந்தார்கள். இப்பொழுது அதைத் தாங்களே உழ ஆரம்பித்து விட்டனர். பதனி இறக்குபவர்களின் நிலைமை முன்னைவிட இப்பொழுது திருப்திகரமா யிருக்கிறதென்று சொல்லலாம். கூட்டுறவுச் சங்கங்களின் முயற்சியினால் அவர்கள் இறக்கும் பதனிக்குக் கொஞ்சம் நல்ல விலை கிடைக்கிறது. இதனால் பக்கத்து ஜில்லாக்களி லிருந்து கூடச் சிலர் பதனி இறக்குவதற்காக இங்கு வந்திருக்கின்றனர். இம்மாதிரி கூட்டுறவுச் சங்கங்கள் 39 ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. என்ன இருந்தாலும், கள் இறக்குவதனால் கிடைத்த வருமானமவ்வளவு பதனி இறக்குவதில் கிடைக்காது. ஆனால் இவர்களில் அநேகருக்குச் சொந்த நிலங்கள் இருப்பதால் அவர்களுடைய நிலைமை ரொம்ப மோசமாகி விட்டதாகச் சொல்ல முடியாது.

கள் இறக்குபவர்களில் வேலையில்லாமல் இருப்போர் எண்ணிக்கை அதிகமாக இல்லை என்பதற்கு, மலாய் நாட்டுக்குப் போக மிகவும் சிலரே முன் வந்தார்கள் என்பதும், ஜில்லா போர்டு ரஸ்தாக்களிலும், சின்கோனாத் தோட்டங்களிலும் வேலை செய்வதற்கு ஒருவரும் முன் வரவில்லையென்பதும் அத்தாட்சியா

கும். எனினும் கள்ளிறக்கும் தொழிலில் இருந்தவர் களுக்கு உதவி செய்வதற்காகப் பின்வரும் நடவடிக் கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன:

வெல்லம் விற்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள்

தென்னம் பதனி இறக்குவதற்கும் அதிலிருந்து வெல்லம் பண்ணுவதற்கும் நான்கு கூட்டுறவுச் சங்கங் கள் ஏற்படுத்தப்பட்டன. பனம் வெல்லம் வருஷத் தில் ஆறு மாதம்தான் கிடைக்கிறது. ஆனால் தேங்காய் வெல்லமோ வருஷம் முழுவதும் கிடைக்கிறது. ஆகை யால் சர்க்கரை ஆலைகளில் அந்த வெல்லத்திலிருந்து சுத்தம் செய்த சர்க்கரை பெற முடியுமா என்று தெரிந்து கொள்வதற்காகத் தொழில் இலாக்கா, இந்த ஜில்லாவில் ஒரு பரிசோதனை செய்து பார்த்தது. தேங்காய் வெல்லத்திலிருந்து நல்ல சர்க்கரை கிடைத் தது. ஆனால் தென்னைமரங்களிலிருந்து பதனி இறக்கு வதற்குக் கேட்கப்படும் கட்டணத்தை உத்தேசித்த பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து நடத்தும் படி இது அவ்வளவு லாபகரமானதில்லையென்று தெரிந்தது.

ஆனால் பனை மரங்களைப் பற்றிய விஷயம் வேறு. 3,80,657 லைசென்ஸ்களில் பனை மரங்களைப் பற்றிய லைசென்ஸ்கள் 5000 தான். பனைமரத்திலிருந்து கள் இறக்கிக் கொண்டிருந்தவர்கள் வெல்லம் காய்ச்சு வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களாகச் சேர்த்து விடப்பட்டார்கள். வருஷ முடிவில் பன வெல்லம்

காய்ச்சுவதற்கு 35 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டு விட்டன. இந்த வெல்லம் சேலம், கொங்கணுபுரம், பொச்சம்பள்ளி முதலிய இடங்களில் கூட்டுறவு விற்பனை ஸ்தலங்களினால் விற்கப்படுகின்றன. பதனி இறக்கும் காலம் முடிகிற சமயத்தில் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டபடியால் அவற்றால் அதிக வெல்லம் விற்க முடியவில்லை. இருந்தும் அவர்கள் இந்த வருஷத்தில் ரூ. 11,744—14—9க்கு வெல்லம் விற்றிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கும், கவனித்துக்கொள்வதற்கும் தனி உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டனர். அடுத்த பதனி இறக்கும் காலத்தில் இந்தச் சங்கங்களின் எண்ணிக்கையும், விற்பனையும் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலாய் குடியேற்றம்

நாற்பத்தைந்து பேர் கொண்ட 13 குடும்பங்கள் 1938 மே மாதத்தில் மலாய் நாட்டுக்குச் சென்றன. ஆனால் இவர்கள் சென்ற பிறகு, துரதிர்ஷ்ட வசமாக அங்கே சம்பளம் குறைக்கப்பட்டபடியால், அந்த நாட்டுக்கு இந்தியத் தொழிலாளிகளை அனுப்பக்கூடாது என்று இந்தியா சர்க்கார் தடுத்து விட்டனர்.

புதிய இடத்தில் குடியேற்றம்

சேலம், ஓமலூர், கிருஷ்ணகிரி தாலூக்காக்களில் மூன்று பெரிய பிரதேசங்கள் முன்பு கள்ளிறக்கிய

வர்கள் குடியேறுவதற்காகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றன. ஓமலூரில் குடியேறும் ஏற்பாடுகள் எல்லாம் அநேகமாக முடிந்துவிட்டன. ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; கிணறுகள் வெட்டப் போகிறார்கள்; சீக்கிரம் இந்த இடம் அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். இந்த இடத்தில் 80 குடும்பங்கள் வசிக்க இடம் இருக்கிறது.

சிக்கனம்

மதுவிலக்குக்கு முன்னால் இந்த ஜில்லாவில் குடியிலும் லாகிரி வஸ்துக்களிலும் கிட்டத்தட்ட அரைக் கோடி ரூபாய் செலவழிந்து கொண்டிருந்தபடியால், இதையெல்லாம் சேர்த்து வைத்துக்கொள்ளச் சொல்வதற்காக ஒரு சிக்கனப் பிரசாரம் ஆரம்பிக்க இது ஒரு நல்ல தருணம் என்று கருதப்பட்டது. சிக்கனப் பிரசார வேலை பின்வரும் ஸ்தாபனங்கள் மூலமாக நடத்தப்பட்டது :—

1. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள், நகர பாங்கிகள்.

2. தனிப்பட்ட சிக்கன ஸ்தாபனங்கள்.

3. சேலம் ஜில்லா அர்பன் பாங்கு.

கூட்டுறவு இலாக்காவைச் சேர்ந்த எல்லா உத்தியோகஸ்தர்களும் இந்த வேலைக்கு முதலிலிருந்தே உதவி புரிந்து வந்திருக்கிறார்கள். சமீபத்தில் சில ரிவினியு உத்தியோகஸ்தர்களும் தங்களுக்கு ஒழிந்த நேரத்தில் வேலை செய்ய முன் வந்திருக்கின்றனர். 1938 செப்டம்பர் முடிய சேமிப்பு ரூ. 22, 763-4-9.

இது அவ்வளவு பெரிய தொகை இல்லை. இருந்தாலும் இதைச் சேமித்து வைத்தவர்கள் இத்தனை நாளாகத் தலைமுறை தலைமுறையாய்க் கடனாளியாய் இருந்து வந்தவர்கள் என்பதையும், பெண்ணின் கலியாணத் துக்காகவோ அல்லது பிள்ளையின் படிப்புக்காகவோ பாங்கியில் பணம் சேர்க்கும் வழக்கம் இல்லாதவர்கள் என்பதையும் கவனிக்கவேண்டும். பணம் சேர்ப்பதற்கு இன்னும் வேறு கஷ்டங்களும் இருக்கின்றன. நெசவுக் காரர்கள் தங்கள் துணிகளை விற்க முடியவில்லையென்று புகார் சொல்லுகின்றனர். குடியானவர்கள் அறுவடை நாளில்தான் தங்களுக்குப் பணம் கிடைக்கிறதென் றும், ஒவ்வொரு மாதமும் உண்டிப் பெட்டியில் சேர்த்துவைக்க முடியவில்லையென்றும் சொல்லுகிறார் கள். ஆனால் ஒரு சந்தோஷகரமான விஷயம் என்ன வென்றால், மாதா மாதம் மிச்சம் பிடிக்கப்படும் தொகையில் அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது. நாளடைவில் இந்த இயக்கம் இந்த ஜில்லாவின் பொருளாதார நிலைமையில் ஒரு சிறந்த மாறுதலை உண்டாக்கும் என்பது நிச்சயம்.

இப்பொழுது கிடைத்த தபாலாபீஸ் சேமிப்பு நிதிக் கணக்கு விவரங்களிலிருந்து இந்த வருஷம் தபா லாபீஸில் சேமித்து வைத்த தொகை சற்றுக் குறைந்து விட்டது என்பது ஏமாற்றத்தை யளிப்பதா யிருக் கிறது. ஆயினும், மதுவிலக்குக்கு முன்னால் குடியர் கள் சேமிப்பு நிதியில் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. சேமிப்பு நிதியெல்லாம் சாதாரண அந்தஸ்து உள்ளவர்களால்தான் வைக்கப் படுகின்றது. ஏழைகளும் தபாலாபீசில் பணம் போடும்படி நாம் பிரசாரம் செய்யவேண்டும். இன்

ஞெரு விஷயமும் நாம் மறந்துவிடக்கூடாது. இத்தனை நாட்களாகக் குடித்துக் கொண்டிருந்தவர்கள் பெரும்பாலும் அரைப் பட்டினியாய் இருந்தவர்கள். ஆகவே இப்பொழுது அவர்கள் கையில் தங்கும் பணமெல்லாம் சாப்பாட்டிலும், துணிமணியிலும், இன்னும் கடன் அடைப்பதிலும் செலவழிந்து போகிறது.

குடியை மறக்க வேறு பானங்கள்

வேறு பானங்கள் கிடைப்பதற்கு வசதிகள் ஏற்படுத்த, ஆரம்பத்திலிருந்தே தேயிலை, காப்பி பிரசார சபைகள் இங்கு வேலை செய்து வந்திருக்கின்றன. தேயிலைப் பிரசார சபையார் பழைய கள்ளுக் கடைகள் சிலவற்றில் டீக் கடைகள் வைத்துத் தேயிலைப் பானம் இனமாகக் கொடுத்து வந்ததோடு, தேயிலைப் பொட்டணமும் விற்று வந்தனர். பிற்பாடு, இவை டீ விற்கும் கடைகளாகவே மாறி விட்டன. இரண்டு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் மோட்டாரில் சுற்றுப் பிரயாணம் செய்தும் பிரசாரம் செய்தும் தேயிலையும் காப்பியும் விநியோகம் செய்தும் வருகிறார்கள். இதனால் டீக் கடைகளும், காப்பிக் கடைகளும் ஜில்லாவில் அதிகரித்திருக்கின்றன. சந்தைகளிலும் இன்னும் ஜனங்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும் மேற்படி மோட்டார் வண்டிகளை அடிக்கடி பார்க்கக்கூடியதாயிற்று.

பஜனைகள் முதலியன

சாயந்திர வேளைகளில் ஜனங்களின் பொழுது போக்குக்கு ஏதாவது ஏற்பாடு செய்வது அவசியம்

என்று கருதப்பட்டது. கிராம வாழ்க்கை சாதாரணமாகவே உற்சாகமற்றது. கள்ளுக் கடை இருந்த காலத்தில் கிராம வாசிகள் சிலர் மது பானத்தில் தங்கள் கவலைகளை மறந்திருந்தார்கள். அத்தகையவர்களுக்கு இப்போது குடியை மறப்பதற்காக ஏதாவது பொழுது போக்குச் சாதனங்கள் அவசியம். முதலில் ஏற்படுத்தப்பட்ட சில பொழுது போக்குகளாவன:—

பஜனைகள், கதாப் பிரசங்கங்கள், தெருக் கூத்துகள், புராணங்கள் வாசித்தல், கிராமபோன் பாட்டுகள் முதலியன. கிராமப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள், கிராமக் கூட்டுறவு நிதிச் சங்கங்கள், தாலூக்கா - கிராம மதுவிலக்குக் கமிட்டியார் முதலியோர் இதில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

கிராம முன்னேற்றப் பள்ளிக்கூடங்கள்

கிராம வாசிகளின் பொழுது போக்குக்கு ஏற்பாடு பண்ணுவதற்காக மே மாதத்தில் ராசிப்பூரில் கிராம முன்னேற்றப் பொழுது போக்குப் பள்ளிக்கூடம் என்று ஒன்று அமைக்கப்பட்டது. இது மிகவும் வெற்றிகரமாக இருந்ததால் சர்க்கார் இன்னும் நான்கு பள்ளிக்கூடங்கள் வைத்துக் கொள்ளும்படி அனுமதி தந்தனர். இதில் வாலிபர்கள் கிராம வழி காட்டி (Village guide) ஆகும்படி பயிற்சி யளிக்கப் பெற்றூர்கள். பின்வரும் காரணங்களுக்காக இதில் விளையாட்டு அம்சம்தான் பிரதானமாக வைக்கப்பட்டது.

கிராம விளையாட்டுக்களும் பந்தயங்களும் சிறந்த பொழுது போக்குச் சாதனங்களாவதுடன், தேக

ஆரோக்கியத்துக்கும் உகந்தவை. அவற்றில் சிறுவர்களுக்குத் தேகப் பயிற்சியும் பெரியவர்களுக்குத் தமாஷும் கிடைக்கின்றன.

அவை கிராம வாசிகளுக்கு ஊக்கத்தை உண்டு பண்ணி, முன்னேற்ற வேலை ஊழியர்களுடன் தொடர்பு உண்டாக்கும். இதைக் கொண்டு கிராம வாசிகளுக்குக் கிராம முன்னேற்றத்தைப் பற்றிய இதர விஷயங்களையும் சொல்லிக் கொடுக்கலாம்.

கிராம விளையாட்டுக்களும் கிராம விளையாட்டுச் சங்கங்களும், முக்கியமாகக் கிராமங்களிலுள்ள கட்சிச் சண்டைகளையும் ஜாதி பேதம் காரணமாகத் தனித்து நிற்பதையும் போக்குகின்றன.

சைதாப்பேட்டை ஓய். எம். ஸி. ஏ. தேகப் பயிற்சிப் பள்ளிக்கூட அதிகாரிகளின் யோசனையின் பேரிலும், அவர்கள் உதவியினாலும் இந்தப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்து நடத்த முடிந்தன. ஓய். எம். ஸி. ஏ.யில் தேர்ச்சி பெற்றவர்களே இப் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறார்கள்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்தப் பள்ளிக்கூடங்களின் திட்டம், காலையில் கிராம விளையாட்டுக்கள் முதலியன சொல்லிக் கொடுப்பது; அதற்குப் பிறகு பல இலாக்கா சர்க்கார் உத்தியோகஸ்தர்களாலும், உத்தியோகஸ்தர் அல்லாதவர்களாலும் கிராம முன்னேற்றத்தின் பல அம்சங்களைப் பற்றிப் பிரசங்கங்கள் நடத்துவது; சாயந்திர வேளைகளில் பக்கத்துக் கிராமங்களுக்குப் போவது, அங்கு விளையாட்டுகள் விளையாடிக் காண்பிப்பது ; பிறகு அங்கங்கே விளையாட்டுச் சங்கங்கள் அமைப்பது ஆகிய வேலைகள்.

பள்ளிக்கூடங்களில் சுமார் 250 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் பாதிப் பேராவது கிராம முன்னேற்ற வேலைகளிலும், கிராம விளையாட்டுகளிலும் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களானல் ஜில்லாவுக்கே எவ்வளவோ நன்மையாயிருக்கும். இதைத் தவிர, பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் காணப்படும் உற்சாகம் இனி பக்கத்துக் கிராமங்களுக்கும் பரவும்.

தர்மபுரியில் ஒரு பள்ளிக்கூடம் நடந்தது. இப்பொழுது திருச்செங்கோட்டில் ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு சில புதிய அம்சங்களும் சேர்க்கப்பட்டன. ஸ்திரீகள்தான் இம்மாதிரி முன்னேற்ற வேலையில் பெரும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டுமாதலால் அவர்களுக்கு என்று ஒரு தனி நாள் ஒதுக்கி வைக்கப்பட்டது.

தர்மபுரியில் வைக்கப்பட்ட கிராமக் காட்சிச் சாலை ராசிபுரத்தில் வைத்ததைவிடப் பெரியது. இதைப் பார்க்க வந்த ஜனக்கூட்டம் ரொம்ப அதிகம். ராசிபுரத்தில் செய்ததுபோல் விவசாய இலாக்கா, கால்நடை இலாக்கா, கூட்டுறவு இலாக்கா ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். தர்மபுரி பள்ளிக்கூடத்தில் கல்வி இலாக்கா ஒன்று புதிதாகச் சேர்க்கப்பட்டது. இதில் ஸ்திரீகள் பகுதியும் இருந்தது. அதில் தையல் வேலை, பூவேலை, கூடை முடைதல் முதலியவையும் காண்பிக்கப்பட்டன. ரிவின்யு இலாக்காவும், ஜில்லா போர்டும் சேர்ந்து தர்மபுரியில் கிராமக் கைத் தொழில் சாமான்களையும் கண்காட்சிச் சாலையில் வைத்தனர். காட்சிச் சாலை மிகவும் வெற்றிகரமாக நடந்தது என்று சொல்லலாம். அதைப்

பார்க்கத் தினம் ஏராளமான கூட்டம் வந்தது. மொத்தம் 50,000 பேர் வந்து பார்த்தார்கள் என்று தெரிகிறது. அதோடு இப்பேர்ப்பட்ட காட்சிச் சாலைகள் ஒவ்வொரு வருஷமும் வைக்கப்பட வேண்டுமென்றும் பலர் தெரிவித்துக் கொண்டார்கள்.

கடைசி நாளன்று கிராம அபிவிருத்தி மந்திரி தலைமை வகித்தார். அன்று ஏராளமான கூட்டம் வந்திருந்தது. அன்று கிராமங்களுக்குள் நடந்த விளையாட்டுப் பந்தயத்துக்கும், "சடுகுடு" பந்தயத்துக்கும் கடைசிப் போட்டி நடந்தது. எந்தக் கட்சி ஜயித்ததோ அந்தக் கட்சியைச் சேர்ந்த கிராமவாசிகள் ஒரே குதூகலமா யிருந்தனர்.

இம்மாதிரி விளையாட்டுகளால் கிராம ஜனங்களும் மாணுக்கர்களும் எவ்வளவு தூரம் நிரந்தரமான பிரயோசனம் அடைவார்கள் என்பது அநுபவத்திலிருந்து தான் தெரியவேண்டும். ஆனுல் ராசிபுரம் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த 40 மாணவர்கள் தாங்கள் தினம் தங்கள் கிராமங்களில் கிராம நிர்மாண வேலைகள் நடத்திக் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறுர்கள். தர்மபுரி பள்ளிக்கூடத்திலிருந்து 32 மாணுக்கர்கள் தாங்கள் தினந்தோறும் விளையாட்டுகள் நடத்தி வருவதாகத் தெரியப்படுத்தி யிருக்கிறுர்கள். விசேஷ நிர்மாண உத்தியோகஸ்தரிடம் ஜனத் தலைவர்களில் சிலர் பள்ளிக்கூடம் வைக்கப்பட்டதிலிருந்து தர்மபுரி புத்துயிர் பெற்று விளங்குகிறது என்று சொன்ஞர்கள். ராசிபுரம் பள்ளிக்கூடத்தினுல் ஏற்பட்டிருக்கும் பலனை அந்த ஊருக்கு யார் வேண்டுமானுலும் இரவு நேரத்தில் போய்ப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். தெருக் கோடிகளில், எங்கு மின்சார விளக்

கின் வெளிச்சம் இருக்கிறதோ, அங்கு, வாலிபர்கள், பையன்கள், பெண்கள் எல்லாரும் "சடுகுடு" விளையாடுவதைப் பார்க்கலாம். கிராமங்களில் கல்யாண காலங்களிலும் திருவிழாக்களிலும் "சடுகுடு" விளையாடப் பட்டு வருகிறது.

இந்தப் பள்ளிக்கூடத்தின் பழைய மாணுக்கர்களின் மற்ற வேலைகள், கூட்டுறவு நிதிச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொடுப்பது, உண்டிப் பெட்டிகள் ஏற்படுத்துவது, கிராமவாசிகளைத் தங்கள் விலைவாசிகளைக் கூட்டுறவுச் சங்கம் மூலமாக விற்கச் சொல்வது முதலியன. சில மாணுக்கர்கள் விசேஷ நிர்மாண உத்தியோகஸ்தர் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அவர் கூடவே சென்றனர். இவர்கள் காட்டும் விளையாட்டுகளினுல் கூட்டம் சேரும். அப்பொழுது ஜனங்களுக்குக் கிராம முன்னேற்ற வேலைகளைப் பற்றி விசேஷ நிர்மாண உத்தியோகஸ்தர் எடுத்துச் சொல்வார். விவசாய டிபுடி டைரக்டரும், ஜில்லா சுகாதார ஆபீசரும் கிராமவாசிகளைக் கூட்டிப் பேசுவதற்கு இதே முறையைப் பின்பற்றினுர்கள்.

நந்தவனங்களும், விளையாட்டு ஸ்தலங்களும்

மேற்கூறிய, கிராம முன்னேற்றப் பள்ளிக்கூடங்களின் நடவடிக்கைகளினுலும், பெரிய கிராமங்களில் ரேடியோ செட்டுகள் வைத்ததனுலும் ஜனங்கள் நந்தவனங்களும், விளையாட்டு மைதானங்களும் வேண்டுமென்று கேட்க ஆரம்பித்து விட்டனர். இம்மாதிரி

அமைக்கப்படும் நந்தவனங்களில் ஒரு சின்னக் கட்டிடம் கட்டி, கிடைத்தால் ரேடியோ செட்டு ஒன்றும் வைக்கப்படுகிறது. பல விதமான விளையாட்டுகளுக்கும் வசதிகள் அமைக்கப் படுகின்றன.

கிராமத்திலுள்ள எல்லா ஜாதியாரும் சாயந்திர வேளையில் ஒன்று கூடுவதற்கு இந்த நந்தவனங்கள் வசதி அளிக்கின்றன. முன்னம் கள்ளுக் கடைகளுக்குப் போனவர்கள் இப்போது இங்கே வருகிறார்கள்.

வேலூர், ராசிபுரம், நாமகிரிப்பேட்டை இந்த இடங்களில் பஞ்சாயத்தார் தங்கள் பணத்தைக் கொண்டும் பொது ஜனங்களிடமிருந்து வசூலித்த பணத்தைக் கொண்டும் பெரிய மைதானங்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆத்தூரில் பொது ஜனங்கள் சேர்ந்து ஒரு நந்தவனம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒரு டென்னிஸ் கோர்ட்டும் கஸரத்து செய்யும் இடமும் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். தாரமங்கலத்தில் சிலர் ஒன்று கூடி ஒரு நந்தவனம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதில் ஒரு பாட்மின்டன் கோர்ட், கஸரத்து செய்யும் இடம், ரேடியோ எல்லாம் அமைத்திருக்கின்றனர்.

கூட்டுறவு இலாக்கா

மதுவிலக்கு அமுலுக்கு வருவதற்கு முன், சேலம், ராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய மூன்று இடங்களில் பலமான கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருந்தன. இவை மூன்றும் சேர்ந்து வருஷத்துக்கு ஆறு லட்சம் ரூபாய் பெறுமான பருத்தியும் நிலக்கடலையும் விற்பனை செய்கின்றன.

ஜில்லாவின் வடக்குப் பாகங்களிலுள்ள குடியானவர்கள் தங்களுக்கு இம்மாதிரி வசதிகள் செய்து தரப்படவேண்டுமென்று கோரினர். அதன்படி கிருஷ்ணகிரி, தர்மபுரி, கீழமங்கலம் ஆகிய இந்த இடங்களில் மூன்று கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த மூன்று விற்பனைச் சங்கங்களும் ஒவ்வொன்றும் ரூ. 10,000 செலவில் ஒரு சாமான் கிடங்கு கட்ட உத்தேசித்திருக்கின்றன. குறிப்பாக, கீழமங்கலம் விற்பனைச் சங்கம் சமீபத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டதானாலும் நல்ல வியாபாரம் செய்து கொண்டிருப்பதுடன் ஹோசூர் தாலூக்கா வாசிகளுக்கு மிகவும் உபயோகமா யிருக்கும் என்றும் தெரிகிறது.

எட்டுக் கிராமங்களில், மத்திய சாமான் கிடங்குக்கு உதவிக் கிடங்காகக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இதே கட்டிடம் கிராமவாசிகள் ஒன்று கூடுவதற்கும் வாசிப்பதற்கும் உபயோகப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் புஸ்தகாலயம் அங்கு வைக்கப்படும். தவிர கிராமக் கூட்டங்கள், விளையாட்டுகள் எல்லாம் அங்கேயே நடக்கும்.

கிராமப் புனருத்தாரணத் திட்டம்

ஜில்லா சுகாதார ஆபீஸரும், விசேஷ நிர்மாண உத்தியோகஸ்தரும் சேர்ந்து ஒரு கிராமப் புனருத்தாரணத் திட்டம் தயாரித்திருக்கிறார்கள். அதில் பொதுஜன சுகாதாரம், போக்கு வரவு, கல்வி, பொருளாதார முன்னேற்றம், விவசாய அபிவிருத்திகள், வேடிக்கைகள், ஸ்திரீகள் முன்னேற்றம் முத

லிய துறைகளில் அபிவிருத்தி ஏற்படும் முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

பத்துத் தாலூக்காக்களிலும், தாலூக்கா ஒன்றுக்கு ஐந்து கிராமம் விகிதம் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பஞ்சாயத்தாரைக் கொண்டோ, அல்லது விசேஷக் கமிட்டிகள் ஏற்படுத்திக்கொண்டோ கிராம முன்னேற்ற வேலே ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ரிவின்யு டிவிஷனல் ஆபீஸரைத் தலைவராகக் கொண்ட டிவிஷனல் கமிட்டிகள் ஏற்படுத்தி இந்தக் கிராம ஸ்தாபனங்களுக்கு உதவி புரிவது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

தொழிலாளிகள்

என்னுடைய ஜனவரி அறிக்கையில், முதல் மூன்று மாதங்களில் மதுவிலக்குச் சட்டம் ஆலைத் தொழிலாளிகளை எப்படிப் பாதித்தது என்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். சேலம் ராஜேந்திரா ஆலே மானேஜிங் டைரக்டரின் அறிக்கையை எடுத்துக் காட்டியிருந்தேன். இந்த ஒரு வருஷத்தின் பலாபலன்களைக் குறித்து எனக்கு இப்பொழுது ஒரு அறிக்கை கிடைத்திருக்கிறது. மதுவிலக்கினால் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றி அவர் கூறியிருந்த விவரமும் கொடுத்திருந்த புள்ளி விவரங்களும் மிகவும் ஆச்சரியகரமாய் இருந்ததால், அவையெல்லாம் சரிதானு என்று நிர்ணயிப்பதற்காக நான் நேரில் ஆலைக்குச் சென்றிருந்தேன். அவர் கூறிய எல்லா விஷயங்களும் ஒவ்வொன்றும் சரிதானு என்று பார்ப்பதற்கு எனக்

குப் போதுமான அவகாசம் இல்லே. ஆகவே நான் நேரில் பார்த்து, விசாரித்து, அவர் அறிக்கையில் வாஸ்தவமானது என்று நிச்சயம் செய்துகொண்ட சில விஷயங்களே மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன்.

மது விலக்குக்கு முன்பு 100க்கு 60 முதல் 70 பேர் விகிதம் குடித்துவிட்டுத் தங்கள் வேலேயைச் சரியானபடி கவனியாமல் இருப்பதுண்டு. வேலேக்குச் சரியானபடி வருவது கிடையாது. வந்தால் நேரம் கழித்து வருவார்கள். சென்னே சர்வ கலாசாலே விசாரணேக்காரரால் பரிசீலனே செய்யப்பட்ட நான்கு மாத ஆஜர் பட்டியலின் புள்ளி விவரங்களாவன :—

	1937	1938
ஜூன்	62%	91%
ஜூலே	60%	94%
ஆகஸ்ட்	64%	92%
செப்டம்பர்	66%	94%

மதுவிலக்குக்கு முன்னல் எல்லா இலாக்காக்களிலும் வேலே சரியானபடி நடைபெருதது சாதாரண அநுபவம். இதனல் அநேக இயந்திரங்கள் பகலிலும், இரவிலும் வேலேயின்றி இருக்கும். பஞ்சு அடிப்பவர்கள் சரியாக வேலேசெய்து போதுமான பஞ்சு கொடுக்காமையால் அநேக தறிகளுக்கு வேலே இல்லாமற் போய் விடும். இதனல் தறி வேலே செய்து கொண்டிருப்பவர்களே அடிக்கடி வேலேயிலிருந்து நீக்கிவைக்க வேண்டியதாய் நேரிடும்.

இன்னும் தொழிலாளிகள் சண்டை போட்டுக் கொண்டு ஒருவரை யொருவர் அடித்துக் கொள்வது,

அஜாக்கிரதையால் இயந்திரங்களைப் பழுதாக்குவது, மேஸ்திரிகளை அடிப்பது, கஞ்சா, பீடி குடிப்பது, வேலையில் அசிரத்தை, தாக சாந்திக்காக அடிக்கடி வேலையை விட்டுப் போவது, சில்லறை விபத்துக்கள் நேரிடுவது, வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டு துப்புவது, இரண்டு ஷிப்ட் ஏற்படுத்த முடியாமலிருப்பது, சில்லறை வியாதிகளினுலும், புருஷர்களின் கொடுமையாலும் ஸ்திரீ தொழிலாளிகள் அடிக்கடி வேலைக்கு வராமல் இருப்பது முதலியன மதுவிலக்குக்கு முன்னுல் சர்வசாதாரணமாக இருந்த நிலைமை. வேலைக்குச் சரியானபடி போகாததால் ஒரு தொழிலாளியாவது முழுச் சம்பளம் வாங்கினது கிடையாது. அநேக தொழிலாளிகள் அழுக்கு உடையுடனும், இன்னும் போதுமான உடையின்றியும் இருந்தனர். திருநாள் சமயத்தில் தொழிலாளிகளுக் கெல்லாம் முன்பணம் கொடுக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் வேலைக்கு வரமாட்டார்கள்.

இந்த நிலைமை மதுவிலக்கின் பயனுகப் பெரிதும் மாறுதல் அடைந்திருக்கிறது. தொழிலாளிசள் முன்னை விட இப்பொழுது நன்ருக வேலை செய்கிருர்கள். ஸ்திரீகள் வேலை செய்யும் இலாக்காக்களைத் தவிர பாக்கி எல்லா இலாக்காக்களிலும் இப்பொழுது மூன்று ஷிப்ட் வைக்கமுடியும், இப்பொழுது சில இலாக்காக்களில் மூன்று ஷிப்ட் இருக்கவும் இருக்கிறது. இயந்திரங்கள் நிற்காமல் ஓடுகின்றன. முன்போல் பழுதடைவது இல்லை. எல்லாரும் ஒழுங்காக வேலைக்கு வருகிருர்கள். அநேகர் முழுச் சம்பளம் வாங்குகிருர்கள். தொழிலாளிகள் முன்னை விட சுத்தமாகவும், நல்ல உடையுடனும் காணப்

படுகிறார்கள். மேஸ்திரிகளும், சூபர்வைஸர்களும் சொல்லுவதைக் கேட்டு நடக்கிறார்கள். இப்பொழுதெல்லாம் அவர்கள் தங்கள் பொழுதை வீணாக்குவதில்லை.

முன்னைவிட அதிக ஆரோக்யமுள்ளவர்களாயிருக்கிறார்கள். தலைவலி என்ற பேச்சு கிடையாது. முன்னெல்லாம் தலைவலி வந்தால் தேய்த்துக் கொள்வதற்காக ஆலை மானேஜர் மாதா மாதம் ஆறு புட்டி நீலகிரித் தைலம் வாங்குவது உண்டு. இப்பொழுது ஒரு புட்டிகூடச் செலவு ஆவதில்லை. ஆலையில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதன் நிர்வாகச் செலவு மதுவிலக்கு ஏற்பட்டதிலிருந்து குறைந்து விட்டது. நான் விசாரித்ததில் முன்னெல்லாம் காலை 6-45க்கு வேலைக்கு வந்ததும் கிட்டத் தட்ட 50 பேர், தலைவலி, வயிற்றுவலி, காய்ச்சல் என்று ஏதாவது ஒரு காரணத்திற்கு லீவு வாங்கிக் கொள்வது உண்டு. இப்பொழுது இரண்டு மூன்று பேருக்குமேல் அப்படி லீவு கேட்பதில்லை. மதுவிலக்குக்கு முன்னால் நீலகிரித் தைலத்தையும், அயடின் திராவகத்தையும் பார்த்துக் கொள்வதற்காக, பகலில் ஒருவன், இரவில் ஒருவன் ஆக இரண்டு பையன்கள் வேலைக்கு இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் தேவை யில்லை. இந்த ஒரு வருஷ காலத்தில் ஆலை இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கக் கூடியதான ஒரே ஒரு விபத்துதான் நேர்ந்தது.

வெற்றிலை பாக்குப் போட்டுத் துப்பும் வழக்கம் நின்றுவிட்டது. இப்பொழுது ஆலை சுத்தமா யிருக்கிறது. ஸ்திரீகள் முன்னைவிடத் தேகாரோக்கியமாய் இருப்பதோடு, நன்றாகவும் வேலை செய்கிறார்கள். முன்னைவிட சுத்தமாகவும், நல்ல உடையுடனும் விளங்

குகிறார்கள். முன்னைப் பார்க்கிலும் கூலி அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். அதனால் அவர்களுடையவாழ்க்கை சந்தோஷகரமா யிருக்கிறது. முன்னைப்போல் திரு விழாக் காலங்களில் முன் பணம் கேட்பதில்லை. முன் பணமாகக் கொடுத்த பணத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

1937, 1938ம் வருஷங்களில் ஜூன் மாதத்தி லிருந்து செப்டம்பர் முடிய உள்ள கணக்குகளைப் பரி சோதித்தபோது முன்பு 10 கட்டு உற்பத்தி செய்யப் பட்டுக்கொண்டிருந்த இடத்தில் இப்பொழுது 19 கட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது என்று தெரி கிறது. இப்படி உற்பத்தி அதிகரித்திருப்பதற்குக் கார ணங்களாவன :—

1. குடியில்லாமையால் தொழிலாளிகள் வேலைக் குத் தவக்கமின்றி வருகிறார்கள். அதனால் கொட்டை நீக்குவது, பஞ்சு அடிப்பது முதலிய இலாக்காக்களில் வேலை துரிதமாக நடக்கிறது. அதனால் நூற்பதற்குப் பஞ்சு தவக்க மில்லாமல் அனுப்பப்படுகிறது.

2. தொழிலாளிகள் வேலையில் தேர்ச்சி பெற்றிருக் கிறார்கள். நூற்கும் இலாக்காவில் எல்லாரும் முழுத் திறமையுடன் வேலை செய்கிறார்கள்.

3. நூல் உற்பத்தி அதிகரிப்பில் மூன்றில் ஒரு பங்குக்குக் காரணம் இப்பொழுது ஒரு வித முரட்டு நூல் நூற்கப்படுவதாக இருக்கலாம். நான் கணக் குப் புஸ்தகங்களைப் பார்த்தபோது நூற்கும் இலாக்கா வில் உற்பத்தி அதிகமாயிருந்தும் மின்சாரச் செலவு அதிகமாகவில்லையென்று அறிந்தேன். பாக்கி இலாக் காக்களில் மின்சார சக்தி கொஞ்சம் அதிகம் செல

No. 11249.

வழிந்திருக்கிறது. இன்னும் விசாரித்ததில் உற்பத்திச் செலவு குறைந்திருப்பதுடன் இயந்திரங்களுக்குத் தனி பாகங்கள் வாங்குவதும் குறைந்திருக்கிறது என்று அறிந்தேன்.

மதுவிலக்குக்குப் பிறகு ஆலை மிகவும் வெற்றிகரமாக நடந்திருப்பதால், தறிகளின் எண்ணிக்கையை இரட்டிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். மானேஜிங் டைரக்டர், நூலின் தரம் உயர்ந்திருப்பதைக் குறித்து விசேஷ திருப்தி தெரிவித்திருக்கிறார். இதனால் இப்போது இந்த ஆலை நூலுக்குக் கிராக்கி அதிகமாம்.

மற்றோர் அத்தாட்சி

மாக்னிசைட் சின்டிகேட் லிமிடெட் (Magnesite Syndicate Ltd.) என்னும் கம்பெனியின் டைரக்டரான மிஸ்டர் ஸாண்டர்ஸன் டெயின்ஸ் என்பவரிடமிருந்தும் எனக்கு ஒரு அறிக்கை கிடைத்திருக்கிறது. மானேஜர் லீவு எடுத்துக்கொண்டு விட்டதால் இவர் அவருக்குப் பதிலாக ஆறு மாதம் வேலை பார்க்கச் சீமையிலிருந்து வந்தவர். அவருக்கு இந்த வேலையைப் பற்றிப் போதிய அநுபவம் உண்டு. நான்கு வருஷங்களுக்கு முன்னர் அவர்தான் இதைக் கவனித்துக் கொண்டிருந்தார். மிஸ்டர் டெயின்ஸ் பின் வருமாறு எழுதுகிறார்:—

"நான் சேலத்தை விட்டுப் போகுமுன்னர், சின்டிகேட்டில் இருக்கும் கூலிகள் மதுவிலக்கினால் அடைந்திருக்கும் பலா பலன்களைப் பற்றி என் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் இங்கு ஆறு மாதம்தான் இருந்திருக்கி றேன். இந்தக் காலத்தில் நான் கேள்விப்பட்ட விஷ யங்களை விட்டு விட்டு, நான் நேரில் பார்த்து, நிரூபிக் கக்கூடியதை மட்டுமே சொல்லப் போகிறேன்.

1. கூலிகள் வேலைக்கு முன்னைவிட ஒழுங்காக வருகிறார்கள். சில நாள் நூற்றுக்கு 95 விகிதம் வேலைக்கு வந்திருக்கிறார்கள்.

2. முன்னைவிட ஸ்திரீகள் நல்ல உடை உடுத்தி வருகிறார்கள். முன்னே கந்தை உடுத்திவந்த பலர் இப்போது சேலை உடுத்தி வருகிறார்கள்.

3. முன்னை விட அமைதியும் திருப்தியும் அதி கம் காணப்படுகின்றன. கூலிகள் முன்னை விட நல்ல சாப்பாடு சாப்பிடுவது இதற்குக் காரணமா யிருக்க லாம்.

4. எனக்குத் தெரிந்த மட்டில் சில கூலிகள் கிராம நடனங்கள் பழகியிருக்கிறார்கள். இதனால் மதுவிலக்குக்கு முன் இருந்த புருஷன்-மனைவி சண்டை அதிகம் குறைந்திருக்கிறது என்று தெரிகிறது."

சர்வகலாசாலை விசாரணை

சென்னை சர்வ கலாசாலையார் சேலம் மதுவிலக் கைப் பற்றித் தெரிந்துகொண்டு வருவதற்காக அனுப் பிய இரண்டு ஸ்திரீ ஆராய்ச்சியாளர்கள் சமர்ப்பித்த அறிக்கையும் எனக்குக் கிடைத்தது. இந்த அறிக் கைகள் மதுவிலக்கின் முதல் ஆறு மாதங்களைப் பற்றித் தான் தெரிவிக்கின்றன. தொழிலாளர்கள் சம்பந்த

மார்க ராஜேந்திரா மில்ஸ் மானேஜரும் மிஸ்டர் டெயின்ஸ் அவர்களும் எனக்கு அனுப்பிய அறிக்கைகளை வலிவுறுத்தி ஊர்ஜிதஞ் செய்ததுடன், சர்வ கலாசாலையார் விசாரணையில் மக்கள் வாழ்க்கை நிலை உயர்ந்திருக்கிறதென்றும் கண்டு பிடித்து அறிவித்துள்ளார்கள். முன்பு போதும் போதாததுமாக இரண்டு வேளை சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் இப்பொழுது மூன்று வேளை சாப்பிடுகிறார்கள். முன்பு ஒரு வேளை சுடு சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது, இரண்டு அல்லது மூன்று வேளை கூடச் சாப்பிடுகிறார்கள். அரிசிச்சோறு சாப்பிடுவது அதிகமாகி யிருக்கிறது. இதர உணவுப் பொருள்களில் முன்னைவிட அதிகப் பணம் செலவழிக்கப்படுகிறது. துணிமணியில் செலவழிப்பதும் கொஞ்சம் அதிகரித்திருக்கிறது. மக்களின் கடன் நிலைமை எப்படி யிருக்கிறதென்பதையே முக்கியமாகக் கருத வேண்டும் என்று ஆராய்ச்சி செய்தவர்கள் கூறித் தங்கள் விசாரணையை நடத்தி யிருக்கிறார்கள். விசாரணை செய்யப்பட்டவர்களில் நூற்றுக்கு 80 பேர் மாதா மாதம் கொஞ்சம் பணம் கொடுத்துத் தங்கள் பழைய கடன்களை அடைத்துக்கொண்டு வருகிறார்கள்; நூற்றுக்கு 5 பேர் எவ்விதக் கடனும் இல்லாமல் இருக்கின்றனர். பணம் சேமித்து வைத்தவர்கள் அதிகமாகக் காணப்படவில்லை; ஆனால் இதை இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் முன்பு குடியில் செலவழிந்து கொண்டிருந்ததெல்லாம் இப்பொழுது சாப்பாடு, துணிமணிகளிலும், கடனை அடைப்பதிலும் செலவழிந்து போகிறது.

நெசவுக்காரர்களை விசாரித்தபோது, அவர்களில் பெரும்பான்மையோர் பெருங் குடியர்கள் என்றும்,

அவர்கள் வருமானத்தில் 100-ல் 35 பங்கைக் குடியில் செலவழித்துவந்தார்களென்றும் தெரிந்தது. நெசவுக்காரர்களில், ஆண்களில் அநேகர் மதுவிலக்கை விரும்பவில்லை. ஆனால் ஸ்திரீகளும் வாலிபர்களில் சிலரும் மதுவிலக்கை மிகவும் சந்தோஷமாக வரவேற்றார்கள். மதுவிலக்கு வந்ததனால் சில பெருங் குடியர்கள் மனம் உடைந்து, குறைந்த வேலை செய்தார்கள்; அவர்கள் வருமானமும் குறைந்தது. ஆனால் இவர்களும் முன்னால் வீட்டுக்குக் கொண்டு வந்த வருமானத்தைவிட இப்பொழுது கொண்டுவருவது உண்மையில் அதிகமே யாகும். பெருங் குடியர்களின் வருமானம் ரூ. 15 லிருந்து ரூ. 12 ஆகக் குறைந்த போதிலும் முன்பு அவர்கள் ரூ. 5-ம் அதற்கு மேலும் குடியில் செலவழிப்பதுண்டு. ஆராய்ச்சியாளர் இரண்டாவது தடவை சேலத்துக்கு விஜயம் செய்தபோது குடிக்க வேண்டுமென்ற ஆசை பழைய குடியர்களிடையே குறைந்திருப்பதைக் கண்டார்.

நெசவுக் குடும்பங்களில் முன்னைவிடப் பசி பட்டினி இப்போது குறைவு. மதுவிலக்குக்கு முன்னால் வாரத்தில் நாலைந்து இரவுகளில் சாப்பிடாமல் தூங்கப் போவது சர்வ சகஜமாயிருந்தது. ஆனால் இப்பொழுது அப்படி இல்லை. முன்னால் வாரத்துக்கு இரண்டு நாள் சாதம் சாப்பிட்டவர்கள் இப்பொழுது வாரத்துக்கு நான்கு நாள் சாதம் சாப்பிடுகிறார்கள். மாமிச உணவுக்கு முன்பு ரூ. 0-12-0 செலவழித்தவர்கள் இப்பொழுது ரூ. 1-4-0 செலவழிக்கிறார்கள். மீன், காப்பி, டீ இவை அதிகமாகச் சாப்பிடப்படுகின்றன. நெசவுக்காரர்கள் தங்கள் குடும்பத்துடன் சினிமாவுக்குப் போகின்றனர்.

இதற்கு முன் ஒரு நாளும் அப்படிக் குடும்பத்துடன் சேர்ந்து சென்றதில்லை. சினிமாவுக்காகச் சராசரி ஒரு குடும்பம் வாரம் எட்டு அணு செலவழிக்கிறது.

வட்டி யெல்லாம் ஒழுங்காகக் கோடுக்கப்பட்டுக் கோண்டு வருகின்றன. முன்னைப் போல் முன் பணத்துக்காக எஜமானனை அரிப்பதும் இல்லை. எல்லாரும் முன்னைவிட நன்ருகவும் திறமையாகவும் வேலை செய்கின்றனர். நேசவுக்காரர்கள் இப்பொழுது குடும்ப விஷயங்களில் அதிக சிரத்தை காண்பிப்பதுடன் முன்போல் மனைவிகளை அடிப்பதும் வைவதும் கிடையாது. ஸ்திரீகள் முன்னைவிடச் சந்தோஷமாகவும், திடகாத்திரமாகவும் காணப்படுகிருர்கள். எல்லாருக்கும் சுயமரியாதை யுணர்ச்சி பரவிக் கோண்டு வருகிறது. நேசவுக்காரர்களிடையில் காந்திஜியின் செல்வாக்கு அதிகமா யிருக்கிறது. அவரிடம் கோண்ட பக்தியினுல் தான் மது விலக்கை ஆதரிக்கிருர்கள்.

கிராமங்கள் அடைந்த பயன்

கிராம ஜனங்களுடன் ஒட்டிப் பழகுகிற அநேக உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தர் அல்லாதவர்கள் ஆகிய அநேகரிடமிருந்து எனக்குப் பல அறிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த அறிக்கைகள் நான் முக்கிய அறிக்கைகளிலிருந்து தெரிந்து கொண்ட விஷயங்களை ஊர்ஜிதப் படுத்துகின்றன. முன்னெல்லாம் சரியான சாப்பாடு இல்லாமல் கவலை யடைந்திருந்த ஜனங்களின் வாழ்க்கை நிலையை மது விலக்கு உயர்த்தி யிருக்கிறது. இந்த ஜில்லாவில் மது விலக்கு அவசியம் என்பதை வற்புறுத்திய பிரதம காரணம்

என்னவெனில், குடித்துக்கொண் டிருந்தவர்களின் ஏழ்மை நிலையேயாகும். அவர்களுக்கும் அவர்களு டைய குடும்பத்துக்கும் முழு வயிறு சாப்பிடுவதற்கே அவர்களுடைய வருமானம் போதுவதில்லை. உடம்பை ஆரோக்கியமாயும் திடகாத்திரமாயும் வைத்துக் கொள்ள வேண்டியதற்கு வேண்டிய சாப்பாட்டைக் கூட அவர்கள் வீட்டுக்கு வாங்கிப் போடாமல் அந்தப் பணத்தைக் குடியில் செலவழித்துக் கொண்டிருந் தார்கள். இதனால்தான் மிதக் குடியர்கள் கூட மது விலக்கினால் நன்மை யடைந்திருக்கிறார்கள். பெருங் குடியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நன்மை கண்கூடு. எத்தனையோ பழங் குடியர்களின் வீடுகளி லெல்லாம் சண்டைகள் நின்று, குடும்ப ஒற்றுமை உண்டாகி, வாழ்க்கை நிலை உயர்ந்திருப்பதைக் காண்கிறோம். சில பெருங் குடியர்கள், குறிப்பாகக் கிழவர்கள், புதிய நிலைக்குத் தங்களைச் சரிப்படுத்திக் கொள்ளாமல் கொஞ்சம் கஷ்டப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் இப்பொழுது தங்களைப் புதிய நிலைக்குத் திருத் திக் கொண்டு விட்டார்கள். இப்படிச் செய்யாத வர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. சென்னை சர்வ கலாசாலையார் அனுப்பிய ஆராய்ச்சிக்காரர்கள் கிராமாந்தரங்களின் நிலைமையைப் பற்றி எழுதிய அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. அதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அண்ணமலை சர்வ கலாசாலை ஆராய்ச்சியாளர் தம்முடைய அறிக் கையைப் பிரசுரித்து விட்டார். அது பத்திரிகை களில் வெளிவந்து விட்டபடியால் அதை இங்கு நான் குறிப்பிடப் போவதில்லை. அவருடைய எல்லா முடிவுகளையும் நான் ஒப்புக்கொள்ளா விட்டாலும் மது விலக்கினால் கிராம ஜனங்களுக்குப் பெருத்த நன்மை

ஏற்பட்டிருக்கிறது என்னும் முடிவை அவர் அறிக்கை ஊர்ஜிதப்படுத்துகிறது.

நான் என்னுடைய ஜூலை அறிக்கையில் சொல்லி யிருக்கிறபடி, மதுவிலக்குக்கு முன்னால் புள்ளி விவரங்கள் தயாரிக்கப்படவில்லை யாதலால் மதுவிலக்கினால் எவ்வளவு பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கும் புள்ளி விவரங்கள் கொடுப்பது சாத்தியமில்லை. ஆனால், அனுபவத்தில், ஏழை ஜனங்களின் நிலைமையில் அபிவிருத்தியைக் கண்கூடாகக் காண்கிறோம். பழங் குடியர்கள் பலர் அநேகமாகத் தங்கள் கடன்களைத் தீர்த்து விட்டார்கள். சிலர் முழுக் கடனையும் தீர்த்து விட்டார்கள். அவர்களுடைய குடும்ப வாழ்க்கையிலும், நடத்தையிலும் மிக்க அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. வாழ்க்கையில் அவர்களுக்குப் புதிய உற்சாகம் பிறந்திருக்கிறது. எல்லாத் தீங்குகளுக்குமே மதுவிலக்கு மருந்து என்று சொல்ல முடியாது. ஆனால் அது கடன் சுமை, பட்டினி, மனச் சஞ்சலம், துர்நடத்தை முதலியவற்றின் ஒரு முக்கிய காரணத்தை நீக்குகிறது. கிராம முன்னேற்ற வேலையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தர் அல்லாதவர்களும் மதுவிலக்கினால் ஏற்பட்டிருக்கும் இந்த நல்ல சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டு, எல்லாத் துறைகளிலும் கிராம வாழ்க்கையின் மேன்மைக்குப் பாடுபட வேண்டும்.

சுருங்கக் கூறினால், மதுவிலக்குச் சட்டம் இந்த ஒரு வருஷத்தில் வெற்றிகரமாக நடந்து வந்திருக்கிறது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். கஞ்சாப் பிரச்னையைத் தவிரப் பாக்கி எங்களுக்கு முதலில் பெரி

தாகத் தோன்றின கஷ்டங்கள் எல்லாம் எளிதில் தீர்ந்து விட்டன. மதுவிலக்கு ஊழியர்களும் சரி, உத்தியோகஸ்தர்கள் - உத்தியோகஸ்தர் அல்லாதவர்களும் சரி, தொடர்ச்சியாக ஊக்கமாக இருந்து, பொதுஜன அபிப்பிராயமும் சாதகமாக இருந்தால், மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்கலாம் என்பதில் ஐயமே இல்லை. இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து திறமையாக மட்டும் நடத்திக் கொண்டு வந்தால் அதனுடைய நன்மைகள் நாளுக்கு நாள் நன்கு புலப்படும். இத்துடன் ஜில்லா முழுவதும் முன்னேற்ற வேலைகளையும் நடத்திவரும் பட்சத்தில், பத்து வருஷங்களில் சேலத்தின் தோற்றமே அடியோடு மாறிவிடும்படியாக ஜனங்கள் அவ்வளவு முன்னேற்ற மடைந்து விடுவார்கள் என்று நம்புகிறேன்.

14—10—38. } ஏ. எப். டபிள்யு. டிக்ஸன்,
கலெக்டர்.

குடி கெடுக்கும் கள்

★

மதுவிலக்கு வேண்டுமா? வேண்டாமா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் கூறவேண்டியதில்லை. நமது மாகாணத்தில் உள்ள கோர்ட்டு தஸ்தாவேஜுகளே பதில் கூறுகின்றன. சில நாட்களுக்கு முன் சென்னை மாகாணத்தில் ஜன்மாந்தர தண்டனையும் நீண்டகால சிறை வாசமும் விதிக்கப்பட்ட கைதிகளில் இரண்டாயிரம் பேருக்கு மேல், காங்கிரஸ் மந்திரி சபையார் விடுதலை செய்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். இவ்வாறு செய்வதில் அபாயமில்லையா என்றும், இப்படிப் பெருங் குற்றவாளிகளை மன்னிக்கலாமா என்றும் சிலர் சட்ட சபையில் கேட்டார்கள். அபாயமில்லை, செய்தது சரியே, நன்னடத்தையோடு பல நாள் சிறைச்சாலையில் இருந்தவர்களைத் தைரியமாய் வெளியில் விடுவதே முறை என்று ராஜாஜி பதில் சொன்னார்.

இப்படி விடுதலை யடைந்தவர்களுடைய குற்றங்களின் விவரம் என்ன, எவ்வாறு அவர்கள் கொலையும் பெரும் கலகங்களும் செய்ய ஏவப்பட்டார்கள் என்பதை ஆராய்ந்த போது, குடியினுல் விளையும் விபரீதங்கள் வெளியாயின. அந்த விருத்தாந்தங்களைப் படித்தோமானுல், மதுவிலக்கே மக்களுக்குப் பெரும் காவல் என்பது நன்கு விளங்கும். அடியில் சொல்லப்பட்ட விஷயங்கள் எல்லாம் கோர்ட்டில் ஸ்தாபிக்கப்பட்ட உண்மைகள்; வெறும் கதையல்ல.

கஞ்சா வெறியில் கொலை

வெங்கடசாமி என்பவன் ஜன்மக் கைதி. இராஜமகேந்திரபுரத்தைச் சேர்ந்தவன். அவன் ஆதய்யா என்பவ

னைக் கொன்றதற்காகத் தண்டனை விதிக்கப்பட்டான். அவனும் அவனுடைய தாயாரும் ஆதய்யாவினுடைய வீட்டின் ஒரு பாகத்தில் குடியிருந்தவர்கள். கொலை நடந்த முதல் நாள்தான் வீட்டைக் காலி பண்ணினார்கள். அடுத்த நாள் குற்றவாளி ஆதய்யாவை நதிக் கரையில் கண்டு அவனைக் கொன்று விட்டான். குற்றவாளி தன்னுடைய மனைவியும் ஆதய்யாவும் கள்ள நட்புக் கொண்டிருந்தார்கள் என்று சந்தேகித்தான்.

குற்றவாளிக்குக் கஞ்சாப் பழக்கமும் குடிப் பழக்கமும் உண்டென்றும், தெருக்களில் அவன் தொந்தரவு விளைவிப்பது உண்டென்றும், கொலை நடந்த முதல் இரண்டு நாளும் அவன் குடித்து விட்டு எல்லாரையும் திட்டிக்கொண்டிருந்தானென்றும் வழக்கின்போது நிரூபிக்கப்பட்டது. குற்றவாளியின் வாக்குமூலத்திலிருந்து கொலை நடந்தபோது அவன் குடிவெறியுடன் இருந்தானென்றும், தன் கையில் இருந்த கத்தியால் அவன் என்ன செய்தான் என்று அவனுக்குத் தெரியாதென்றும் தெரிய வந்தன. கஞ்சா வெறியில் இருந்தபோது அவன் கொலை செய்திருக்க வேண்டுமென்று நியாயாதிபதி அபிப்பிராயப்பட்டார்.

கள் வெறியே காரணம்

காஸரகோடு தாலூக்கா நீலேசுவரம் வாசியான கிட்டா என்பவன் அம்பு என்றவனை வயிற்றில் கத்தியால் குத்திக் கொன்றதற்காகத் தண்டிக்கப்பட்டான்.

குற்றவாளி உள்ளிட்ட சில நாவிதர்கள் சேர்ந்து 'குரி' நடத்தினார்கள். இதற்காக அவர்கள் மாதம் ஒரு தடவை கூடுவது வழக்கம். ஒரு கூட்டத்தின்போது, வேலை யெல்லாம் முடிந்த பிறகு அவர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். சாப்பாட்டின்போது குற்றவாளிக்கும் இன்னொருவனுக்கும்

ஏதோ சண்டை மூளவே, குற்றவாளி அம்புவைக் குத்திக் கொன்று விட்டான்.

விருந்து வைத்த கேலு என்கிறவன் இரண்டு குடம் கள்ளும், இரண்டு குடம் பட்டைச் சாராயமும் கொண்டு வந்தானென்றும், அதை எல்லாரும் குடித்துவிட்டுக் குடிவெறியில் இருந்தபோதுதான் எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தார்கள் என்றும் குற்றவாளி சொன்னான். 'குரி'க்குப் போயிருந்த மற்றவர்கள் வழக்கின்போது சாட்சி சொல்லுகையில் தாங்கள் சாப்பாட்டுக்கு முன்னர் கள்ளும், பட்டைச் சாராயமும் குடிக்கவில்லையென்றும், சாப்பிடும்போது புத்தி ஸ்வாதீனத்துடன்தான் இருந்ததாகவும் கூறினார்கள். இருந்தபோதிலும் அம்புவைப் பரிசோதித்த டாக்டர், எல்லாரும் குடித்து விட்டிருந்தார்கள் என்று தாம் தெரிந்து கொண்டதாகவும், சாப்பாட்டுக்கு முன்னர் எல்லாரும் கள்ளும், பட்டைச் சாராயமும் குடித்திருந்தார்கள் என்று நம்ப இடமிருக்கிறதென்றும் சொன்னார். அம்பு என்றவனைக் கொல்லக் குற்றவாளிக்கு ஒருவித முகாந்திரமும் இல்லையென்றும், குடிவெறியினால்தான் அப்படிச் செய்தானென்றும் தெரிந்தது.

சகோதர ஹத்தி

அனந்தபுரம் ஜில்லா, கங்காதரபள்ளி, சித்த திப்பன் என்பவன் தன்னுடைய சகோதரன் ரங்கனைக் கொன்றதற்காகத் தண்டிக்கப்பட்டான்.

சந்தையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது தான் குடித்து விட்டு வந்ததாகவும், வந்ததும் தன்னுடைய சகோதரனை அவன் வயலில் என்ன வேலை செய்தானென்று கேட்டதாகவும் குற்றவாளி ஒப்புக் கொண்டான். சகோதரன் அவமரியாதையாகப் பதில் சொன்னதால் குற்றவாளி ஒரு பெரிய சம்மட்டியால் அவன் தலையில் போட்டு விட்டான்.

கடன் சாராயத்தினால் வந்த கேடு

கொலைக் குற்றத்துக்காக மங்களூரைச் சேர்ந்த தம்மைய பூசாரி விசாரிக்கப்பட்டுத் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டான். கொலை நடந்த அன்று குற்றவாளிக்கும், இறந்து போனவனுக்கும் குற்றவாளியின் பட்டைச் சாராயக் கடையில் தகராறு நடந்ததாம். ஏனென்றால் இறந்து போனவன் பழைய பாக்கியைக் கொடுக்காமல் பட்டைச் சாராயம் கேட்டானும். சச்சரவை நேரில் பார்த்த மூன்று பேர்கள் சொன்ன சாட்சியத்திலிருந்து சாராயம் குடித்த பிறகு அவன் கடையை விட்டு வெளியே போக முயன்றதாகவும், பூசாரி அவனைக் கன்னுபின்னுவென்று வைததாகவும் தெரிந்தது. பிறகு அவன், பூசாரியைப் பிடித்துத் தள்ளவே, பூசாரி ஒரு அரிவாளை எடுத்து அவன் மார்பில் குத்திவிட்டான். குத்துப்பட்டவன் கொஞ்ச நாழிகையில் இறந்துவிட்டான்.

மூன்று குடியர்களின் அக்கிரமம்

தண்ணீர்ப் பந்தல்பாளையம் சித்த மூப்பன் என்றவனை வேணுமென்றே இடது மார்பில் கத்தியால் குத்திக் கொன்றதாகச் சுருட்டையன் மேலும், அவன் கூட்டாளிகளான செம்பட்டையன், வண்டிக்காரன் இவர்கள் பேரிலும் குற்றம் சாட்டப்பட்டது.

கொலை நடந்த அன்று காலை கலால் இன்ஸ்பெக்டர் செம்பட்டையன் வீட்டையும், இன்னும் கிராமத்தில் சில வீடுகளையும் சோதனை போட்டாரென்றும், ஆனால் குற்றத்துக்கு உட்படுத்தக் கூடிய எதுவும் அகப்படவில்லையென்றும் தெரிகிறது. கலால் இன்ஸ்பெக்டர் போன பிறகு செம்பட்டையனும், சுருட்டையனும் மூன்று மணி சுமாருக்குக் கள்ளுக் கடைக்குப் போய்க் கள்ளுக் குடித்தார்கள். அப்

பொழுது செம்பட்டையன் சுருட்டையனிடம் சித்தன் (அதாவது, கொலையுண்டவன்) தான் கலால் இன்ஸ்பெக்டருக்குச் சொல்லிக் கொடுத்ததாகவும், அவன் அடிக்கடி அப்படிச் சொல்லிக் கொடுக்கிறானென்றும், ஆகையால் அவனைக் கொன்றுவிட வேண்டுமென்றும் சொன்னான். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு அவர்கள் கள்ளுக் கடையை விட்டுப் போய் ஆறு மணி சமயத்துக்கு வண்டிக்காரனைக் கூட்டிக் கொண்டு திரும்பவும் கள்ளுக்கடைக்கு வந்தார்கள். கடையில் கொஞ்சம் மீதியிருந்த கள்ளை அவர்கள் குடித்தார்கள். பிறகு கடையை விட்டுப் போனார்கள். கடையிலிருந்த கள்ளெல்லாம் வியாபாரம் ஆகிவிட்டதால் கள்ளுக் கடைக்காரனாகிய மாரியப்பப் பிள்ளையும் இவர்களுடன் கூடச் சென்றான்.

முனியப்பன் கோவிலை யடைந்ததும் இந்த மூவரும் அங்கு நின்று விட்டார்கள். சித்தன் அப்பொழுதுதான் எதிர்ப் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தான். அவன் இவர்கள் இருந்த இடத்துக்கு வந்ததும், வண்டிக்காரன் அவனை நிறுத்தி, அவன் கை ஒன்றைப் பிடித்துக் கொண்டு அவன் கலால் இன்ஸ்பெக்டரிடம் எத்தனை கேசுகள் கொடுத்தானென்று கேட்டான். இதற்குள் சுருட்டையன் அவனுடைய இன்னொரு கையையும் பிடித்துக் கொள்ளவே, பக்கத்தில் நின்ற செம்பட்டையன் தன்னிடமுள்ள கத்தியால் அவனைக் குத்திக் கொன்று விட்டான். மாரியப்பப் பிள்ளையும், இன்னும் சிலரும் இதைக் கண்ணால் பார்த்த சாட்சிகள். சித்தன் ஒரு மாதத்திற்குப் பிறகு இறந்தான்.

"நீ யார் கேட்பதற்கு?"

தர்மாவரம் தாலூகா கொண்ட பள்ளியைச் சேர்ந்த பண்டி ராமப்பனைக் கொன்றதாக இராமண்ணா தண்டிக்கப் பட்டான்.

வழக்கின் விவரங்கள் வருமாறு:—ஒரு இரவு இராமண்ணா குடித்து விட்டுத் தன் குடிசைக்கு வந்து பார்த்த போது, அவன் தன் மனைவியை ஏன் விளக்கு ஏற்றவில்லை யென்று வைது, அடிக்கத் தொடங்கினான். அவனுடன் கூட வந்த ஒருவன் அவனைச் சமாதானப்படுத்தப் பார்த்தான்; ஆனால் முடியவில்லை. கிராமத்தில் பெரிய மனிதரான பண்டி ராமப்பாவுக்கு இது விஷயம் தெரிவிக்கப் படவே, அவன் வந்து இராமண்ணா தன் பெண்டாட்டியை அடிப்பதைத் தடுக்கப் பார்த்தான். இராமண்ணா கோபங் கொண்டு, "நீ யார் கேட்டதற்கு?" என்றான். உடனே இவனுக்கும் அவனுக்கும் வார்த்தைகள் மூள, பண்டி ராமப்பா இராமண்ணாவை உதைக்க, இராமண்ணா பண்டி ராமப்பாவை ஒரு ஈட்டியால் குத்திக் கொன்று விட்டான்.

கூட்டாளியைக் கொன்றான்

சேலம் ஜில்லா மல்லூர் மூக்காவள்ளி கிராமம் செங்கன் என்பவனைக் கொன்றதாகப் பேய்க்காட்டான் குற்றம் சாட்டப்பட்டான்.

வழக்கின் விவரங்கள் வருமாறு.—பேய்க்காட்டான், செங்கன், குழந்தைக் கவுண்டன், ராமசாமிக் கவுண்டன் இந்த நால்வரும் சேர்ந்து மாம்பழ வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். குழந்தைக் கவுண்டன்தான் வியாபாரத்திற்கு மூலதனம் போட்டவன்; லாபத்தை எல்லாரும் சமமாகப் பிரித்துக் கொண்டிருந்தார்கள். கொலை நடந்த அன்று நால்வரும் ஒரு கள்ளுக் கடைக்குப் போய் ஆளுக்கு இரண்டணாவுக்குக் கள் குடித்தார்கள். குழந்தைக் கவுண்டன் பொதுப் பணத்திலிருந்து கள்ளுச் செலவுக்குக் கொடுத்தான். செங்கன் தான் குடித்தது போதாதென்றும் இன்னும் கொஞ்சம் வேண்டுமென்றும் குழந்தைக் கவுண்டனைக் கேட்டான். குழந்தைக் கவுண்டன் ஓரணா கொடுக்க அவன் ஓரணாவுக்குக் கள் வாங்கிக் குடித்தான்.

தங்கள் லாபப் பணத்தை இந்த மாதிரி வீணாகச் செலவழிக்கக் கூடாது என்று பேய்க்காட்டான் சொன்னான். சங்கன் உடனே, "நீ யார் கேட்பதற்கு?" என்றான். இரண்டு பேரும் குடித்திருந்ததால் வாக்கு வாதம் இத்துடன் நிற்கவில்லை. இந்தச் சமயத்தில் கந்தசாமி என்கிற ஒருவன் அவர்களுடன் சேர்ந்து கொள்ளவே ஐவரும் சண்டை போட்டுக்கொண்டே வீடு திரும்பினர். கிராமத்தை யடைந்ததும் கந்தசாமி தன் வீட்டுக்குப் போய்விட்டான்; ராமசாமியும் அவனுடன் போய் விட்டான். குழந்தைக் கவுண்டனும், செங்கனும், பேய்க்காட்டானும், வீட்டிற்கு முன்னால் நின்றனர். செங்கன் தன் வீட்டுக்குப் போய் ஒரு தடியுடன் திரும்பி வந்தான். பேய்க்காட்டானுடைய வீட்டுக்குப் பக்கத்தில் வந்ததும் செங்கன் தன் கழியை அங்கிருந்த ஒரு பாறையின்மேல் தட்டி, "தைரியம் இருந்தால் வாடா பார்க்கலாம்" என்று பேய்க்காட்டானை அழைத்தான். பேய்க்காட்டான் தன் வீட்டுக்குள் நுழைந்து, ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு செங்கன் மேல் பாய்ந்தான். செங்கன் தன் கழியைப் போட்டு விட்டுக் குழந்தைக் கவுண்டனிடம் பாதுகாப்புக்காக ஓடினான். ஆனால் பேய்க்காட்டான் அவன் கழுத்தைப் பிடித்துக் கொண்டு அவன் விலாவில் குத்தி விட்டான்.

செங்கன் காயமான இடத்தை ஒரு கையால் அமுக்கிப் பிடித்துக் கொண்டு, குழந்தைக் கவுண்டன் வீட்டுப் பக்கம் கொஞ்ச தூரம் ஓடி, கீழே விழுந்து இறந்தான்.

குடித்துவிட்டுச் சண்டையிட்டுக் கொண்டிருந்தபோது கொலை நடந்தபடியால் பேய்க்காட்டானுக்கு மரண தண்டனைக்குப் பதில் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டது.

மனைவியும் குடித்திருந்தாள்

மின்னக்கல் கிராமம் வீர போயன் தன்னுடைய சகோதரியின் புருஷனை கொங்க போயனைக் கொன்றதற்காகக்

குற்றம் சாட்டப்பட்டான். கூலி வேலைக்காகப் போய் விட்டு மூவரும் சேலத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். மூவரும் குடித்திருந்தார்கள். நொரை மாரியம்மன் கோவிலண்டை வந்தபோது வீர போயனின் சகோதரி தன்னுடைய புருஷனை கொங்க போயனை ஏதோ சொன்னாள். கொங்க போயன் தன் மனைவியை அடித்தான். உடனே வீர போயன் ஒரு பேனாக் கத்தியால் கொங்க போயனைக் குத்திக் கொன்று விட்டான்.

கொலை நடந்த சமயத்தில் எல்லாரும் குடித்திருந்தார்கள் என்பதைப் பற்றிச் சந்தேகமில்லையாதலாலும், அதோடு கொலையுண்டவன் தன்னுடைய மனைவியான வீர போயனுடைய சகோதரியை அடித்தான் என்பதாலும் ஹைகோர்ட்டார், கீழ்க்கோர்ட்டார் விதித்த மரண தண்டனையை மாற்றி, தீவாந்தர சிட்சை விதித்தனர்.

சீட்டாட்டத் தகராறு

மலையப்பக் கவுண்டனைக் கொன்றதாகச் செலம்பக் கவுண்டன்பாளையம் செங்கோடக் கவுண்டன் குற்றம் சாட்டப்பட்டான்.

மூடக் குறிச்சியில் உள்ள ஒரு கள்ளுக் கடையில் குடித்து விட்டுச் சண்டை போடும்போது அவன் மலையப்பக் கவுண்டனைக் கத்தியால் குத்திவிட்டான். சம்பவத்தின் விவரங்கள் பின் வருமாறு :—

செங்கோடக் கவுண்டனும் கொலை யுண்டவனும் கள்ளுக் கடைக்குப் போய் அதிகப்படியாகவே கள்ளுக் குடித்தார்கள். அந்தச் சமயத்தில் இன்னும் சில வாடிக்கைக்காரர்கள் உள்ளே வந்து சீட்டு விளையாடலாம் என்று சொன்னார்கள். கடையில் சீட்டு விளையாடக்கூடாது என்று கள்ளுக் கடைக்காரன் சொன்னான். கொலையுண்டவன் கடைக்காரன்

கட்சியிலும், செங்கோடக் கவுண்டன் சீட்டு விளையாடவேண்டும் என்று சொன்னவர் கட்சியிலும் சேர்ந்து கொண்டனர். செக்கோடக் கவுண்டனுக்கும் கொலை யுண்டவனுக்கும் வாய்ச்சண்டை மூற்றிக் கைச் சண்டையாக மாறிற்று. இரண்டு பேரும் குஸ்தி போட்டுக்கொண்டு, தரையில் உருண்டு புரண்டார்கள். பின்னர் இரண்டு பேரும் விலக்கப்பட்டார்கள். சண்டையின்போது கொலையுண்டவன் செங்கோடன் கையைக் கடித்துவிட்டான் போலிருக்கிறது. செங்கோடக் கவுண்டன் கீழே யிருந்து எழுந்ததும் கொலையுண்டவன் தன் கையைக் கடித்ததற்காக அவனைக் குத்தி விடுவதாகச் சொன்னான். கொலையுண்டவன், "எங்கே, நீ குத்துவதைப் பார்க்கலாம்!" என்று முன் வந்தான். செங்கோடக் கவுண்டன் உடனே தன் கத்தியை எடுத்து அவன் மார்பில் குத்திக் கொன்றுவிட்டான்.

விரோதத்தினாலோ, அல்லது வேணுமென்றோ கொலை செய்யப்படவில்லை யாதலாலும், ஆனால் குடி மயக்கத்தில் நடந்ததாலும், செங்கோடக் கவுண்டனுக்கு மரண தண்டனைக்குப் பதில் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டது.

நாலணாவுக்கு ஒரு கொலை!

பாலகொண்டா நாகன், ஐஸாக் என்பவனைக் கொன்றதற்கு ஜன்மக் கைதியானான். கள்ளுக் கடையில் நாலு அணா மாமிசம் வாங்கியதற்குப் பணம் கொடுக்கவில்லை என்று சண்டை ஆரம்பித்தது. கடையில் ஆரம்பித்த பேச்சுச் சண்டை கடைக்கு வெளியே கத்திக் கலகமாயிற்று. அதில் கொலையும் நடந்தது. பிறகு தண்டனை.

திருட்டுச் சாராயம் செய்த வினை

ராசிபுரம் தாலூக்கா பட்டணம் புதூர் வாசியான சப்புப் படையாச்சியும், இன்னும் மூன்று பேரும் செங்

கோடக் கவுண்டன் என்னும் ஒருவனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள். இறந்துபோன செங்கோடக் கவுண்டன் கலால் உத்தியோகஸ்தரிடம் முத்துப் படையாச்சி என்கிற ஒருவனும், குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவனும் திருட்டுச் சாராயம் இறக்குவதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னதாகவும், அதற்குக் கலால் உத்தியோகஸ்தர் அவன் அப்படிச் சொல்வது பிரயோசன மில்லையென்றும், அவர்களைக் கையும் களவுமாய்ப் பிடித்தால்தான் பிரயோசனம் உண்டு என்று சொன்னதாகவும் தெரிகிறது. பிறகு ஒரு நாள் இறந்து போனவனின் சகோதரன் கலால் உத்தியோகஸ்தரிடம் சென்று முத்துப் படையாச்சியும், சுப்புப் படையாச்சியும், இன்னும் ஒருவனும் சாராயம் இறக்க ஆரம்பித்து விட்டார்கள் என்று சொன்னான். கலால் உத்தியோகஸ்தரும், நான்கு பியூன்களும் அந்த இடத்திற்குச் சென்று முத்துப் படையாச்சியைக் கைது செய்தார்கள். சுப்புப் படையாச்சியும், இன்னொருவனும் அங்கே காணப்படவில்லை.

குற்றம் நடந்த அன்று இரவு, குற்றம் சாட்டப்பெற்ற நான்கு பேரும் இறந்து போனவன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து, "ஏன் நீங்கள் எங்களைப்பற்றிக் கலால் உத்தியோகஸ்தரிடம் சொல்லிக் கொடுத்தீர்கள்?" என்று கேட்டதற்கு, அவன், "நாங்கள் ஒன்றும் சொல்லிக் கொடுக்கவில்லை. சப் இன்ஸ்பெக்டர் அவராகவே கண்டு பிடித்தார்" என்று சொன்னான். சுப்புப் படையாச்சி, "நீங்கள் சொல்லிக் கொடுக்காமல் அவருக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டதற்குச் செங்கோடன், "நான்தான் சொல்லிக் கொடுத்தேன். நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்றான். உடனே சுப்புப் படையாச்சியின் கூட்டாளி செங்கோடனைப் பிடித்துக்கொள்ள, சுப்புப் படையாச்சி அவனை மார்பில் பேனாக் கத்தியால் குத்திக் கொன்று விட்டான்.

சாட்சியத்திலிருந்து இரண்டு பேருக்கும் ஏதோ வாக்கு வாதம் நடந்ததென்றும், ஆனால் சுப்புப் படையாச்சி முன்

யோசனையின்றி இறந்து போனவனைக் குத்திக் கொன்று விட்டானென்றும் தெரிந்தது. ஆகவே ஹைகோர்ட்டார் தீவாந்தர சிட்சையே போதுமென்று தீர்மானித்தனர்.

பச்சிளம் பிள்ளையின் கொலை

அவநாசி தாலூக்கா சுள்ளிப்பாளையம் பழனி ஆண்டி என்பவன் சின்னபழனிக் கவுண்டனைக் கொன்றதாகவும் ராமாய்க் கவுண்டனையும், நஞ்சக்காளையும் காயப் படுத்திய தாகவும் குற்றம் சாட்டப்பட்டான்.

குற்றவாளிக்கும் அவன் தகப்பனின் சகோதரனுகிய அண்ணுமலைக்கும், குற்றவாளியும் அவன் சகோதரனும் எச்சில் இலைகள் எடுத்து ஜாதியை அவமானப்படுத்தினுர்கள் என்று தகராறு எழுந்தது. ராமாய்க் கவுண்டனும் இன்னெரு வெள்ளாளனும் இதைச் கேள்வியுற்று, அண்ணுமலை வீட்டுக்குப் போய்க் குற்றவாளியைச் சாந்தப்படுத்தினுன். குற்றவாளி அப்பொழுது அந்த இடத்தை விட்டுப் போய் விட்டான். ஆனுல் கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பவும் வாக்குவாதம் நடந்ததாக ராமாய்க் கவுண்டனும், அந்த வெள்ளாளனும் கேள்விப்பட்டுப் போய்ப் பார்த்ததில் குற்றவாளி கையில் ஒரு வாங்குக் கத்தி வைத்திருந்தான். ராமாய்க் கவுண்டன் குற்றவாளியைச் சண்டை போடாமல் போகும் படிக் கேட்டுக் கொண்டான். அவன் இதைச் சொல்லி விட்டு வீட்டிற்குப் போவதற்காகத் திரும்பினபோது குற்றவாளி அவனைக் கத்தியால் குத்தினுன். அப்பொழுது அந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்த ஒரு பன்னிரண்டு வயதுப் பையன் "பழனி ஆண்டி ராமாய்க் கவுண்டனைக் குத்தி விட்டான்" என்று கத்தினுன். அதற்காகக் குற்றவாளி அந்தப் பையனை அங்கேயே குத்திக் கொன்ருன். பிறகு பக்கத்தில் நின்று கொண்டிருந்த நஞ்சக்காளையும் குத்தினுன். சாட்சியத்திலிருந்து குற்றவாளி குடி வெறியில் இருந்தானென்

றும், தனக்கு எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் கத்தியால் குத்தினுனென்றும் தெரிந்தது. அவன் குடி வெறியின் காரணமாக ஒரு பாவமும் அறியாத ஒரு சிறு பையன் உயிர் இழக்கவேண்டி யிருந்தது. குற்றவாளிக்குத் தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டது.

குடி வெறியில் கொன்றான்

திருச்செந்தூர் தாலூக்கா, கதாகிருஷ்ண புரத்தைச் சேர்ந்த கள் இறக்கும் தொழில் செய்யும் ஆபிரகாம் நாடான் சாமி நாடான் என்னும் ஒருவனைக் கொன்றதாகவும், ஆபிரகாம் நாடானின் எஜமானனுகிய தங்கைய நாடான் கொலை செய்யும்படி தூண்டியதாகவும் குற்றம் சாட்டப்பட்டார்கள்.

தங்கைய நாடான் சாமி நாடானின்மேல் வஞ்சம் வைத்துக் கொண்டிருந்தான். ஏனெனில், சாமி நாடான்தான் கலால் அதிகாரிகளிடம் தான் திருட்டுத்தனமாய்க் கள் இறக்கியதாகச் சொல்லிக் கொடுத்துத் தனக்கு அபராதம் விழும்படி செய்தான் என்று நினைத்துக் கொண்டிருந்தான். ஆகையால் அவன்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காகச் சாமி நாடான் கள் இறக்கும் இடத்தில் லைசென்ஸ் இல்லாத மரத்தின்மீது ஒரு கள்ளுப் பானையை மாட்டி வைக்கத் தீர்மானித்தான். பிரஸ்தாப இரவு அன்றைக்குத் தங்கைய நாடானும், ஆபிரகாம் நாடானும் ராத்திரி ஒன்பது மணிக்குப் புறப்பட்டுச் சாமி நாடான் கள் இறக்கும் இடத்திற்குப் போனார்கள். தங்கையா கீழே நின்றுகொள்ள ஆபிரகாம் நாடான் மரத்தின் மீதேறி ஒரு கள்ளுப் பானையை மாட்டி வைத்தான். இந்தச் சமயத்தில் சாமி நாடான் ஆறுமுக சித்தன் என்னும் ஒருவனுடன் அங்கு வந்தான். அவனுக்கு இவர்கள் தன்னைத் திருட்டுக் கள்ளு இறக்கியதாகக் குற்றம் சாட்டப் பார்க்கிறார்கள் என்று சந்தேகம். அவர்கள் ஆபிரகாமைக் கீழே இறங்கும்படிச் சொன்னார்கள். ஆபிரகாம் கீழே இறங்கியதும் அவனைக் கிராம முன்சீப்பிடம் கூட்டிக்

கொண்டு போனார்கள். வழியில் "சாமி நாடானை வெட்டு" என்று ஆபிரகாமுக்கு யாரோ குரல் கொடுப்பது கேட்டது. உடனே ஆபிரகாம் சாமி நாடானை அவனது இடது கழுத்தில் தன் கையிலிருந்த பாளை சீவும் கத்தியால் வெட்டினான். கேசு விசாரிக்கும்போது ஆபிரகாம் தான் கொலை செய்த போது குடித்திருந்ததாக ஒப்புக் கொண்டான். கிடைத்த விவரங்களிலிருந்து அவன் முன் யோசனையின்றி, ஏதோ திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சியால் கொலை செய்தான் என்று தெரிந்தது.

கீழ்க் கோர்ட்டார் விதித்த மரண தண்டனை தீவாந்தர சிட்சையாக மாற்றப்பட்டது.

சண்டைக்குக் காரணம் இல்லை

ஈரோடு தாலூக்கா சின்னையம்பாளையம் ராமசாமிக் கவுண்டன் கொலைக் குற்றத்துக்காகத் தண்டனை யடைந்தவன். இறந்து போனவன் பட்டைச் சாராயம் குடித்திருந்தான். அவனும் குற்றவாளியும் ஏதோ சண்டை போட்டுக் கொள்ள, இறந்து போனவன் குற்றவாளியை ஒரு சுவர் பக்கம் தள்ளி, அவன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு கன்னத்தில் அறைந்தான். சென்னிமலைக் கவுண்டன் இவர்கள் இரண்டு பேரையும் பிரித்து வைத்தான். குற்றவாளி வீட்டுக்குத் திரும்பிவிட்ட போதிலும், இறந்து போனவன் அவனைத் தொடர்ந்து வந்து தன்னுடன் சண்டை போடும்படி கூப்பிட்டான். குற்றவாளி அவனை ஈட்டியால் குத்தினான். சாட்சியத்திலிருந்து சண்டைக்குக் காரணம் என்னவென்று விளங்கவில்லை.

"என் பத்து ரூபாயைக் கொடு!"

ஈரோடு தாலூக்கா, சாணார் பாளையத்தைச் சேர்ந்த செந்தி மூப்பனிடம் இறந்து போனவன் வேலைக்கு இருந்

தான். இறந்து போனவன் ஒரு பழைய 'கேடி'. ஏதோ மனஸ்தாபத்தினால் கொலை நடப்பதற்கு ஒன்றரை மாதத்திற்கு முன்பு வேலையை விட்டு விட்டான். 1933ஞு ஜனவரிமீ 14-ந் தேதி பக்கத்துக் கிராமத்தில் ஏதோ ஒரு பண்டிகை நடந்தது. அதற்கு ரொம்ப ஜனங்கள் போயிருந்தார்கள். பண்டிகையன்று இருவரும் சந்திக்க, இறந்து போனவன் குற்றவாளியைத் தனக்குக் கொடுக்க வேண்டிய பத்து ரூபாயைக் கேட்டான். குற்றவாளி முடியாது என்றான். இருவரும் சண்டை போட்டுக் கொண்டார்கள். அந்த சமயம் இரண்டு பேரும் குடித்திருந்தார்கள். சண்டையின்போது செந்தி மூப்பன் இறந்தவனைக் குத்திக் கொன்று விட்டான்.

குடிவெறியில் வலுச் சண்டை

அவநாசி தாலூக்கா தக்களூர் சின்னய்ய கவுண்டன் ஜன்மக் கைதி. சம்பவம் நடந்தபோது அவன் 2½ டிராம் பட்டைச் சாராயம் குடித்திருந்தான் என்று கடைக்காரன் சாட்சி சொன்னான். குற்றவாளி இறந்து போனவனைப் பார்த்து, "டேய் கைக்கோளப் பயலே! (இறந்து போனவன் கைக்கோளர் அதாவது நெசவு ஜாதியைச் சேர்ந்தவன்) எங்கேடா போகிறாய்?" என்று கேட்டான். இறந்தவன் தான் சூலூருக்குப் போவதாகச் சொன்னபோது, குற்றவாளி அவனை ஒரு ரூபாய் கடன் கேட்டான். அதற்கு இறந்து போனவன் தன்னிடம் பஸ் சத்தம்தான் இருப்பதாகச் சொன்னான். அதற்குக் குற்றவாளி அவன் குடுமியைப் பிடித்து, அவனை முஷ்டியால் குத்தினான். அங்கே கூடியிருந்தவர்கள் இரண்டு பேரையும் விலக்கினார்கள். ஆனால் இறந்து போனவன் வீட்டுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தபோது குற்றவாளி அவனைப் பின் தொடர்ந்து கத்தியால் குத்திவிட்டான்.

எனக்கு ஏன் கொடுக்கவில்லை?

உடுமலைப்பேட்டை தாலூக்கா, உடையார் பாளையத்தைச் சேர்ந்த கண்டி சக்கிலி கொலைக் குற்றத்துக்காகத் தண்டனை யடைந்தான். அந்த ஊரில் செத்துப் போன ஒருவனின் தகனக் கிரியைச் செலவிற்காக, ஜாதித் தலைவன் பொதுப் பணம் சேகரிக்க வந்தபோது குற்றவாளி ஒன்றும் கொடுக்கவில்லை. சேகரித்த பணத்தில் பாதிப் பணம் குடியில் செலவழிக்கப்படுவது வழக்கம். அதன்படி பாக்கி எல்லாரும் குடித்தார்கள். குற்றவாளி மட்டும் பணம் கொடுத்துக் குடிக்க வேண்டி யிருந்தது. அவன் ஜாதித் தலைவனை வழக்கப்படி தனக்கு என் இனாமாகக் குடிக்கக் கொடுக்கவில்லை யென்று கேட்டான். அதற்கு ஜாதித் தலைவன் அவன் தகனக் கிரியைக்கு ஒன்றும் கொடுக்கவில்லை யாதலால் குடிக்கக் கொடுக்கவில்லை யென்று சொன்னான். இதனால் சண்டை மூள, சண்டையின்போது குற்றவாளி ஜாதித் தலைவனைக் குத்திக் கொன்று விட்டான். சம்பவம் குடித்துவிட்டுச் சண்டை போட்டபோது நடந்ததென்று ருசுவாயிற்று.

தடியால் அடித்தான்

திருச்செங்கோடு தாலூக்காவில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த வெட்டியான் பெரியான் என்பவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டான். அவன், அவன் தகப்பன், அவன் மாமன் மூன்று பேரும் இறந்துபோன வெள்ளையன் வீட்டிற்கு வந்து, அவனையும் அவன் ஜனங்களையும் அவர்கள் ஏற்படுத்தி யிருந்த ஒரு விருந்துக்கு அழைத்தார்கள். இறந்து போனவன் அழைப்பை ஒப்புக்கொண்டான். ஆனால் அவனும் அவன் ஜனங்களும் சாப்பிடப் போகவில்லை. குற்றவாளி நிறையக் குடித்துவிட்டு, இறந்தவன் வீட்டுக்குப் போய் அவனும் அவன் ஜனங்களும் விருந்துக்கு வாராததைப் பற்றியும், தங்களுடைய கல்யாண காரியங்களில் தலையிட்டதைப் பற்

றியும் சண்டை போட ஆரம்பித்தான். வார்த்தைகள் வசவுகளாக மாற, சண்டையின்போது வெட்டியான் தன்னை மறந்து இறந்தவன் தலையில் ஒரு தடிக் கம்பினால் அடிக்க அவன் இறந்தான். வெட்டியானுக்குத் தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டது.

தகப்பனைக் கொன்றான்

சிகாகோல் தாலூக்காவில் அப்பள ராமுடு கொலைக் குற்றத்துக்காகத் தண்டனை யடைந்தவன். கொலை யுண்டவன் தன்னுடைய மகனைச் சரியாக நடத்தாமல் அவனுக்குச் சாப்பாடு போடக்கூடாது என்று உத்தரவிட்டான். இந்தக் கொடுமையைப் பொறுக்காமல் மகன் ரங்கூனுக்குப் போனான். அவன் திரும்பி வந்ததும், அவன் கொண்டு வந்திருந்த ஒரு தோலாத் தங்கத்தைப் பற்றிச் சண்டை மூண்டது. கொலை நடந்த அன்று மாலை, வயலில் உழுதுகொண்டிருந்த மகனைத் தகப்பன் தடிகொண்டு விரட்டினான். மகன் தன்னுடைய துணைக்கு அப்பள ராமுடுவை அழைத்துக் கொண்டான். இருவரும் தாங்கள் செய்யப்போகும் காரியத்திற்குத் தைரியம் உண்டாவதற்காக நன்றாகக் குடித்துவிட்டுப் போய், தகப்பன் தூங்கும்போது அவனை அடித்துக் கொன்று விட்டார்கள்.

காரணமில்லாக் கலகம்

பொள்ளாச்சியைச் சேர்ந்த பச்சையப்பனும் மற்றொரு எதிரியும் இறந்துபோன கிட்டன் மீதும் காளியம்மாள் மீதும் விரோதம் கொண்டிருந்தார்கள். ஏனெனில் காளியம்மாள் அவர்கள் மீதும் தகப்பன் மீதும் ஒரு பிராது போட்டிருந்தாள். அதில் கிட்டனைத் தன் பக்கமாகச் சாட்சி சொல்லக் கூப்பிட்டிருந்தாள். இரண்டாவது குற்றவாளி வாதி பக்கம் ஆஜரான நாலாம் நம்பர் சாட்சியுடன் சண்டை

போட்டுக்கொண்டு தனக்குக் குடிக்கப் பணம் கேட்டுக் கொண்டிருந்தபோது கிட்டன் நடுவில் குறுக்கிட்டான். அப்போது காளியம்மாளும் அங்கு வந்து சேர்ந்தாள். கிட்டன் குறுக்கிட்டது காளியம்மாள் தூண்டுதலினுல்தான் என்று நினைத்துக்கொண்டு குற்றவாளி அவனைக் குத்தினுன். காளியம்மாளையும் கையில் இருந்த குச்சியால் அடித்தான். முதலில் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனுல் குடித்து விட்டுச் சண்டை போடும்போது கொலை நடந்ததாகையால் மரண தண்டனை தீவாந்தர சிட்சையாக மாற்றப்பட்டது.

கிழவியின் கொலை

விசாகப்பட்டினம் ஜில்லா சூலூர் கிராமத்தைச் சேர்ந்த தாலிகாடு ஒரு கிழவியைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டான்.

ஆப்பிக்கும் அவள் சகோதரி பங்காருவுக்கும் ஏதோ சண்டை நடந்து கொண்டிருந்தது. தாலிகாடு இதில் தலையிட்டுப் பங்காருவை அடிக்க ஆரம்பித்தான். இதற்காக இறந்து போனவள் இவனுடன் சண்டைக்கு வந்தாள். இவன் கோபங்கொண்டு ஒரு நுகத்தடியை எடுத்து அவள் தலையில் அடித்தான். அவள் கீழே விழுந்து, பிறகு எழுந்திருக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தபொழுது ஆப்பி அவள் வயிற்றில் உதைத்தாள். அடுத்த நாள் காலை அடிபட்டவள் இறந்து விட்டாள்.

தாலிகாடு தான் அன்று கள்ளும், பட்டைச் சாராயமும் அதிகமாய்க் குடித்ததாகவும், தான் எப்படி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தானென்றும், யாரை அடித்தானென்று தெரியாதென்றும் சொன்னுன். சாட்சியங்களி லிருந்து அவன் தான் என்ன செய்கிறுன் என்பதே தெரியாதபடி அவ்வளவு அளவுக்குக் குடிக்கவில்லையென்று தெரிந்தது. ஆனுல் அவனுக்குச் சண்டை போடத் தோன்றவும், கட்டுக்

கடங்காமல் காரியங்கள் செய்யவேண்டிய அளவுக்குக் குடித்தி ருந்தான். ஆகையால் அவனுக்குத் தீவாந்தர சிட்சை விதிக் கப்பட்டது.

"கள் ஏன் குறைகிறது?"

வையாபுரி 5410 ெந. ஜன்மக் கைதி. குற்றவாளிக் கும் கள்ளுக் கடைக்காரனுக்கும், குற்றவாளியைக் கடை யைப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னதில் கள்ளு குறை கிறது என்று சண்டை எழுந்தது. குற்றவாளி தான் ஒரு புட்டிக் கள்தான் குடித்ததாகவும், தன்னை யாராவது ஏமாற் றிக் காசு கொடுக்காமல் குடித்திருக்கவேண்டும் என்றும் சொன்னான். கள்ளுக் கடைக்காரன் அவனைக் கடையை விட்டுத் துரத்தினான். குற்றவாளி இதைப் பற்றித் தன்னு டைய சகோதரர்களிடம் சொன்னான். ஆனால் அவர்கள் இதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. குற்றவாளி கோபங் கொண்டு, ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்துக் கடைக்குத் தீ வைத்து விட்டு ஓடினான்.

சகோதரர்கள் அவனைப் பிடிக்க ஓடினார்கள். இதில் கருமான் என்கிற ஒருவனும் சேர்ந்து கொண்டான். குற்ற வாளி தன் கையிலிருந்த கத்தியால் கருமானைக் குத்திக் கொன்று விட்டான். நியாயாதிபதி பின்வருமாறு சொல்லி யிருக்கிறார்:—

"குற்றவாளி கள்ளுக் கடையில் வேலை செய்து கொண் டிருந்ததால் குறைந்த பட்சம் ஒரு புட்டிக் கள்ளாவது குடித் திருக்க வேண்டும். ஒரு வேளை அதிகமாகவும் குடித்திருக்க லாம். அவன் அன்று இரவ வீட்டுக்கு வந்தபோது விபரீத மாக நடந்து கொண்டான் என்று அவனுடைய சகோதரன் சொல்கிறான். அவன் சாப்பாடு வேண்டாமென்று சொன்ன தாகவும், ஆனால் அவன் குடித்திருந்தானா என்பது தனக்குத் தெரியாதென்றும் சொல்கிறான்."

